விலை ரூபா: 5.00 பக்கங்கள் பத்து Registered as a News paper in Sri Lanka.

# வலம்புரி
# VALAMPURI


மல்லிகா மிக்சர் மாளிகை


காரமான சுவையுடன்
ரேஸ்ரி பொம்பே ரீப்பீஸ்
ரேஸ்ரி றைற்ரானிக் காரவடை
ரேஸ்ரி மரவள்ளி பீஸ்
இல.149, மின்சார நிலைய வீதி
(பஸ் நிலையம் அருகே)
யாழ்ப்பாணம்


சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 தை 9 செவ்வாய்க்கிழமை (22.01.2002) தொலைபேசி 3378 ஒலி 34

## நிபந்தனையற்ற பேச்சுக்கு புலிகள் வந்தால் அவர்கள் மீதான தடையை நீக்கலாம்!
### அஸ்கிரிய மகாநாயக்கர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு முன்வருவார்களானால் அவர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவதில் தவறில்லை என்று அஸ்கிரிய மகாநாயக்கர் அதிசங்கைக்குரிய உடுகமபுத்தரகித்தர தேரர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் பெருந்தோட்டத்துறை அமைச்சர் லக்ஸ்மன்கிரியல்ல, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் லலித் சமரவிக்ரம, கட்சியின் பொதுச்செயலாளர் கப்புக்கொட்டுவ ஆகியோர் அஸ்கிரிய மகாநாயக்கர் அதிசங்கைக்குரிய உடுதுமபுத்தரகித்தர தேரரைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு கருத்துச் கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

பிரதமர் ரணில் விக்ரமசிங்க தற்போது மேற்கொண்டு வரும்

(10ம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவுக் கடலில் கடற்படையினர் சூடு?

(வவுனியா)

முல்லைத்தீவு கடலில் நேற்று முன்தினம் இரவு கடற்படையினர் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. முல்லைத்தீவுக் கடலில் காணப்பட்ட இனந்தெரியாத கப்பல் ஒன்றை நோக்கியே துப்பாக்கிவேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அரசின் மோதல் தவிர்ப்பு கடற்பகுதியில் கடைப்பிடிக்கப்பட மாட்டாதென அரசு ஏற்கனவே அறிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் குறித்து அரசதரப்பு எதுவித தகவலையும் வெளியிடவில்லை.(ந)

## தலைவர் பிரபாவின் உத்தரவில்
# பத்து போர்க்கைதிகளை புலிகள் விடுதலை செய்தனர்!

## சமாதான சமிக்ஞை என தமிழ்ச்செல்வன் உரை

(வவுனியா விசேட நிருபர்)

**வடபகுதி யுத்த முனைகளில் போர்க் கைதிகளாக விடுதலைப் புலிகளால் பிடிக்கப்பட்ட பத்து படையினர் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் உத்தரவின் பேரில் நேற்று மாலை 6.30 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனால் விடுதலை செய்யப்பட்டனர்.**

**மல்லாவி சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வதிவிடப் பிரதிநிதிகளும் மற்றும் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு சென்ற காணாமல்போன படையினர் சங்கப் பிரதிநிதிகள் முன்னிலையில் பத்துப் பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.**

தமிழீழ விடுதலைப்புலிகளினால் வடபகுதி யுத்தமுனைகளில் காலத்துக்கு காலம் பிடிக்கப்பட்ட படையினர்களே நேற்று மாலை விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த யுத்தக்கைதிகளை விடுவித்து சு.ப.தமிழ்ச்செல்வன் உரையாற்றினார். அங்கு அவர் உரையாற்றும்போது கூறியதாவது.

***சமாதான நல்லெண்ண விடுதலை***

தமிழீழ தேசிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் காலத்துக்கு காலம் மனிதாபிமான அடிப்படையில், சமாதானத்திற்கான நல்லெண்ண சமிக்ஞையாக யுத்தக்கைதிகளை அவர்களுடைய பெற்றோர்களினதும், உறவினர்களினதும், முன்னிலையில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள் மூலமாக விடுதலை செய்து வருகிறார்.

இன்று நடைபெற்றுக்கொண்

(10ம் பக்கம் பார்க்க)

## விடுதலை செய்யப்பட்ட 10 படையினரின் விபரம்

(வவுனியா)

தமிழீழ வீடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உத்தரவின்பேரில் ஆரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனால் விடுவிக்கப்பட்ட 10படையினரின் பெயர் விபரம் வருமாறு.

★ 1994ம் ஆண்டு நவம்பர் 16ந் திகதி நடைபெற்ற பூநகரி நாகதேவன்துறை தாக்குதலின் போது கைது செய்யப்பட்ட பதுளை வெலிமடையைச் சேர்ந்த ஆர்.பி. விமலசிங்கா,

★1994ம் ஆண்டு யூலை 24ம் திகதி மண்கிண்டிமலையில் கைது செய்யப்பட்ட அனுராதபுரத்தைச் சேர்ந்த பிலியந்த ஆனந்த

(10ம் பக்கம்பார்க்க)

### நிரந்தர யுத்தநிறுத்தம் குறித்து
## அன்ரன் பாலசிங்கத்துடன்

இந்த யுத்தக்கைதிகளை விடுவித்து சு.ப.தமிழ்ச்செல்வன் உரையாற்றினார். அங்கு அவர் காலத்துக்கு காலம் மனிதாபிமான அடிப்படையில், சமாதானத்திற்கான நல்லெண்ண சமிக்ஞையாக விடுதலை செய்து வருகிறார். இன்று நடைபெற்றுக்கொண்

(10ம் பக்கம் பார்க்க)

அரசு - புலிகள் சமாதானப் பேச்சு

# மாநில அரசுகள் சம்மதித்தால் மத்திய அரசு அதனைப் பரிசீலிக்கும்

## ஊடக அமைச்சர் வெங்கையா நாயுடு தெரிவிப்பு

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள், தென்னிந்தியாவில் தங்கியிருந்து, இலங்கை அரசுடன் சமாதானப் பேச்சில் ஈடுபடுவதை மாநில அரசுகள் அங்கீகரித்தால் அதுபற்றி மத்திய அரசு பரிசீலிக்கும் என்று இந்திய மத்திய ஊடக வளர்ச்சித்துறை அமைச்சர் வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்.

சென்னை தாம்பரம் மேல் நிலைப் பள்ளியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பேசிய போதே அமைச்சர் நாயுடு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தமது அமைப்பின் அரசியல் ஆலோச

(10ம் பக்கம் பார்க்க)

# பாதை மாறிய பொலிஸ் குழுவினர் புலிகளின் பகுதிக்கு சென்றனர்!

## விசாரணையின் பின் விடுதலை

(மட்டக்களப்பு)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தினுள் சென்ற பொலிஸ் அதிகாரிகள் குழு ஒன்று விடுதலைப்புலிகளால் விசாரிக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யபபட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மட்டக்களப்பு பட்டிருப்பு பாலமருகே இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது-கொழும்பிலிருந்து புடையினருக்கான நேர்முகத்தேர்வொன்றை நடத்துவதற்காக மட்டக்களப்பிலுள்ள விசேட அதிரடிப்படை முகாமிற்கு மேற்படி பொலிஸ் அதிகாரிகள் வந்திருந்தனர். இவர்கள் நேர்முகத்தேர்வை முடித்துக்கொண்டு மட்டக்களப்பிலிருந்து அம்பாறை நோக்கி சென்றுகொண்டிருந்த போது

(10ம் பக்கம் பார்க்க)

# அன்ரன் பாலசிங்கத்துடன் நோர்வேக் குழு இன்று பேச்சு

(ஒஸ்லோ)

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான மூவர் அடங்கிய தூதுக்குழுவினர் இன்று லண்டன் செல்கின்றனர்.

லண்டன் செல்லும் நோர்வே தூதுக்குழுவினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் நிரந்தர யுத்தநிறுத்தம் ஒன்றுக்கான வாய்ப்புக்கள் குறித்து பேசவுள்ளனர்.

இப்பேச்சுக்களின் போது இலங்கை அரசின் நிலைப்பாடு குறித்து அன்ரன் பாலசிங்கத்துக்கு விளக்கம் கூறப்பட உள்ளது.

இந்தியாவில் அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான நிரந்தர யுத்தநிறுத்தம் காரணமாக ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படலாம் என்றும் நோர்வே ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன (வ)

# மீன்பிடித்தடைக்கு எதிராக தொடர் உண்ணாவிரதம்

## *30ம் திகதி முதல் யாழ் செயலகத்தில்*

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலில் ஈடுபடுவதற்குத் தொடர்ந்தும் தடை விதிக்கப்படுமாயின் எதிர்வரும் 30ம் திகதி தொடக்கம் யாழ் செயலகத்துக்கு முன்பாக தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக வடமராட்சி கடற்றெழிலாழர் கூட்டுறவுச் சமாசச் செயலாளர் எஸ் சூரியகுமார் தெரிவித்துள்ளார்.

புதிய அரசு பதவியேற்று ஒரு மாதம் கடந்த நிலையிலும், நாம் சுதந்திரமான தொழிலில் ஈடுபட முடியாதுள்ளது.

இந்நிலையில் கடற்றொழிலில் உள்ள சகல தடைகளும் நீக்கப்படும் வரை எதிர்வரும் 30ம் திகதி முதல் இவ் உண்ணாவிரதப்போராட்டம் தொடரப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (ந.43)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

**SPOKEN ENGLiSH**

ஆங்கிலத்தில் சுலபமாக கதைக்கப் பயில தபால் மூலமும் 'வேலைபார்ப்பவர்க்கு விசேடவகுப்பு ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி **Dip/cer in SCiNECE(LONDON)** 426 (302) காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம் நாகலிங்கசுவாமிகள் வீதி சங்கானை. (4277)


## இணக்கப்..

அவர்களுக்கு தேவையான எரிபொருள் உரவகைகள் முதலியவற்றைப் பெறுவதிற்கு வசதியளிக்கப்பட வேண்டும்.

புலிகள்மீதான தடைநீக்கப்படும் என்பதற்காகவே தமிழ் மக்கள் கடந்தபொதுத்தேர்தலில் வாக்களித்துள்ளனர் எனவே மக்கள் வழங்கிய தீர்ப்பின்படி அவர்கள் மீதான தடையை நீக்குவதோடு அவர்களோடு பேசியே எமது தேசியப்பிரச்சினையை தீர்க்க வேண்டும்.

● அரசும்புலிகளும் பேச்சுவார்த்தைநடத்தி ஒருஇணக்கநிலைகாணும்வரை உள்ளுராட்சி தேர்தலை நடத்தக் கூடாது. (எ)

# சமயங்கள் ஒன்றிணைவதன் மூலமே சமத்துவ சமுதாயம் உருவாக்கலாம்

### பாப்பரசரின் பிரதிநிதி அருட்தந்தை சென்நாண் தெரிவிப்பு

திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்ட காலத்திலிருந்து இந்த மண்ணிற்கு வருவதற்கு மிகவும் ஆவலாயிருந்தேன. இங்கு வந்து உங்களோடு உங்கள் துன்பங்களில் பங்கு கொள்ள விரும்பினேன் அக்கனவு இப் போதுதான் நனவாகியது. திருச்சபையும், திருத்தந்தையும் உங்கள்மேல் கொண்டுள்ள அன்பையும் அக்கறையையும் நான் தெரியப் படுத்திக் கொள்கிறேன்.

இவ்வாறு யாழ்வந்த பாப்பரசரின் பிரதிநிதி அருட் தந்தை தோமஸ்யே சென்நாண் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

20 ஆண்டு காலமாக நீங்கள் பல்வேறு இன்னல்களிற்கும், இக்கட்டுகளிற்கும் உள்ளாகியிருக்கிறீர்கள், நீண்டகால, குறுகியகால, இடம்பெயர்வுகளைச் சந்தித்துள்ளீர்கள் இதன் காரணமாக பலர் பல நாடுகளிற்கு குடிபெயர்ந்தும் உள்ளார்கள்இத் துனப காலந்தில் பலர்இறந்திருக்கின்றார்கள், பலர் அனாதைகள் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள் பலர் விதவைகள் ஆகியிருக்கின்றார்கள். இப் பட்டியலை நாம் நீட்டிக் கொண்டே போகலாம்.

நீங்கள் இத் துன்பங்களினூடாக பயணித்தவர்கள்என்று அறிகின்ற போது உண்மையில் என் வாழ்விற்கு புத்தூக்கம் கிடைக்கின்றது இத் துன்பங்களிற்கு எல்லாம் தீர்க்கமான முடிவுகிடைக்கும் என்ற நம்பிக்கையோடுதான் நீங்கள் பயணித்துள்ளீர்கள்.

புனித சின்னப்பரின்கூற்றுப்படி வளமையிலும் வாழத் தெரியும் வறுமையிலும்வாழத் தெரியும் என்பதற்கு இணங்க புதிய சவால்களிற்கு, புதிய சூழலுக்கும் முகம் கொடுக்க நீங்கள் பழக்கப்பட்டுவிட்டீர்கள். தூய ஆவியின் பிரசன்னம் உங்களோடு இருப்பதையே இது நமக்குக் காட்டுகின்றது. இறைவனின் சாயலாகப் படைக்கப் பட்ட நாம் புதிய உலகத்தைப் படைப்பதற்காக அழைக்கப்பட்டுள்ளோம் இதற்குள்ளே இந்த உலகில் தீமை உண்டு தீமை தன் பக்கத்தில் எம்மை ஈர்த்துக் கொள்ளாத விதத்தி நாங்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

கிறிஸ்துவினுடைய அன்பை நீங்கள் வெளியுலகிற்குக் காட்டியிருக்கின்றீர்கள் உங்களது. அன்புச்செயல்கள்கிறிஸ்துவை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறியிருக்கின்றது. உங்களது திருச்சபை உயிரூட்டமானது என்பதை எண்ணி நீங்கள் பெருமையடைய வேண்டியவர்கள்.

இம் மறைமாவட்டத்தின் மற்றைய பகுதியான வன்னியை நாம் மறந்து போகக் கூடாது அவர்கள் அரசியல் பொருளாதார சமூகரீதியில் மிகவும் கடினமான இறுக்கமான துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் மீளதமது சொந்த இடங்களுக்கு வரமுடியாது தவித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களும்ஒரே விசுவாசத்துடன் வாழ்ந்து காட்டிய எமது சகோதர சகோதரிகள் என்பதை நாம் மறந்துவிடமுடியாது.

திருச்சபையைச் சேர்ந்த நாம் பார்வையாளர்களாக இல்லாமல் புதியபடைப்பிற்கு வித்திடுபவர்களாக திகழ வேண்டும் மற்றவர்களால் எமதுவரலாறு உற்பத்திசெய்யப்படுவதாக இருக்காது நாமே எமதுவரலாற்றை படைப்பவர்களாகத் திகழ வேண்டும். கிறிஸ்தவஒன்றிப்பை ஏற்படுத்துவன் மூலமும் பிறசமயத்தவர்களோடு உரையாடல்களை வலுப்படுத்துவதன் வாயிலாகவும் உண்மையையும் நீதியையும் சமத்துவமும் நிறைந்த புதிய சமூகத்தை உருவாக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்-

அண்மையில் நடைபெற்ற தேர்தலும் புதியஅரசமைப்பு உருவாக்கமும் மக்கள் மத்தியில் சமாதானமும் நீதியும் நிறைந்த தீர்வுக்கான நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றது வடக்கு தெற்கு வாழ் மக்கள் மூன்றாம்தரப்புமத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை மூலம்தீர்வை உருவாக்கும்படி கோரியிருக்கின்றார்கள் மக்களுடைய இந்தக் கோரிக்கையை ஏற்று இந்த நாட்டில் சமாதானம் நிலவ நாம்கடினமாகஉழைப்போம்.

நாம் அனைவரும் சமாதானத்தின் கருவிகளாகத் திகழ வேண்டும் சமாதானத்திற்கான செய்தியை திருத்தந்தை 2002ஆம் ஆண்டு சமாதான தினத்தில் அறைகூவலிட்டார் மன்னிப்பின் வழி சமாதானத்திற்காக நாம் உழைக்க வேண்டும்.

எந்த ஒருகட்சியோ அமைப்போ எமக்கு சமாதானத்தை தந்து விடுமென்றும் இருந்துவிட முடியாது சமூகத்தின் அடிமட்டத்தில்இருந்து இதற்கான ஆயத்தங்கள் மேற் கொள்ள வேண்டும் எமது குடும்பங்கள் துறவறக் குழுமங்கள் பங்குகள் இதிலே அதிக ஈடுபாடு கொள்ளவேண்டும்.

மக்களது நலனில் அக்கறை கொள்கின்ற திருச்சபைஅமைதியின் குரலுக்கு செவிமடுத்து அமைதியை உருவாக்க உழைக்க வேண்டும் பலருடைய மீட்பிற்காக தன்னுயிரை அர்ப்பணித்த கிறிஸ்துவின் முன் மாதிரியைப் பற்றி வாழ நாம் அழைக்கப்படுகின்றோம்.

ஈற்றில் இந்த ஆபத்தான காலகட்டத்திலும் யாழ்தலத் திருச்சபை தனது வரலாற்றுக் கடமையை நேர்த்தியாக நிறைவு செய்யும் என நான் நம்புகின்றேன் என்று கூறினார். (இ)


# கலாலயா பயிற்சியகம்

**மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.**

(பெருமாள் கோபிலுக்கு அண்மையில்)

## மகளிருக்கான மனைப் பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்

★ **கேக் ஐசிங்**
(பட்டர் ஐசிங், றோயல் ஐசிங், பாச்மென் ஐசிங், புறொஸ்றிங் ஐசிங், **Fondant Icing** மற்றும் மாச்சீனி அலங்காரம்)

★ **உணவு தயாரித்தல்**
(கீழைத்தேச, மேலைத்தேசஉணவுகள், சிற்றுண்டிகள், புடிங்வகைகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், சூப்வகைகள தயாரித்தல், இத்துடன் உணவை அலங்கரிக்கும் முறை, மரக்கறிகளைக் குடைந்து உருவங்கள் செய்தல், மேசை அலங்காரம், உணவு பரிமாறும் விதம்)

★ **உடை தயாரித்தல்**
(குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள், கதிரை விரிப்பு, தலையணை உறை தைத்தல், பூப்போடுதல்)

★ **பூவேலை**
(ஸ்ரொக்கின் நெற், டிப் இன்மலர்கள், **Panclay** மலர்கள், பேப்பர் றிபன் மலர்கள், துணியினால் மலர்கள், மலர்ச் செண்டுகள் **Bouquet** செய்தல்)

★ **கை வேலை**
(பேப்பர் அன்ங்காரம், **Soft Toys**, வைக்கோல் வேலை, கழிவுத்துணிவேலை, கம்பளி நூல்வேலை, றிபன் வேலை)

★ **பப்றிக் வர்ணம் தீட்டுதல் (FEBRIC PAINTING)**
(கதிரை விரிப்பு, தலையணைஉறை, உடைகள், சாடிகளில் வர்ணம் தீட்டுதல்)

ஆகிய பயிற்சிகள் பயிற்றுவிக்கப்படும். மேற்படி பயிற்சிகள் எல்லாவற்றையும் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், முக ஒப்பனை, கோல வகுப்புக்கள் நடைபெறும்.

★ பயிற்சிக் காலம் 6 மாதம்.

★ பயிற்சியின் முடிவில் டிப்ளோமா தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.

★ இப்பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது .

★ கிழமை நாள்பிரிவு பயிற்சிகள் திங்கள், செவ்வாய், புதன்ஆகிய நாட்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1·00 மணி வரை நடைபெறும்

★ சனி, ஞாயிறு பிரிவு பயிற்சிகள் காலை 9-00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை நடைபெறும்.

★ சனி. ஞாயிறு புதியவகுப்புக்கள் ஆரம்பம் 27-01-2002 (ஞாயிறு)

★ கிழமை நாள் புதியவகுப்புக்கள் ஆரம்பம்- 28-01-2002 திங்கள்)

மேலும் விவரங்களுக்கு காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை நேரில் தொடர்பு கொள்ளவும்.

(சி 3318)

**-இயக்குநர்.**


## அறிவித்தல்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

குடியியல் நடை முறைக் கோவையின் 528ம் பிரிவின் கீழான விண்ணப்பம் தொடர்பில் இறந்தவர்கள் குமாரசாமி சிறீதரனும் பெண் லோகேஸ்வரியும்

வழ. இல. தத்துவம் 24
1) சிறீதரன் ஜெயசாந்தினி
2) சிறீதரன் இராஜகிவி
3) சிறீதரன் ஜெயந்தினி
4) சிறீதரன் ஜெனசன்

அனைவரும் பராயமடையாதவர்கள் தோற்றம் தங்கள் ''அடுத்த நண்பன்'' குமாரசாமி இராமச்சந்திரன் மூலம் 113, பலாலி வீதி யாழ்ப்பாணம். மனுதாரர்கள்

இவ் வழக்கில் 2002ம் ஆண்டு தை மாதம் 9ம்திகதி மன்று இட்ட கட்டளையின் பிரகாரம் மேற் குறித்த 1- 4ம் மனுதாரர்களின் தந்தையார் குமாரசாமி சிறீதரனும் தாயார் சிறீதரன் பெண்லோகேஸ்வரியும் ஓட்டோ வண்டியில் 27. 3. 2002 திகதியன்று தங்கள் வீட்டிற்குச் செல்லும் வழியில் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடை பெற்ற மோதலில் சிக்குண்டு அகால மரணமடைந்துள்ளபடியால் அவர்களின் சொத்து அவர்களின் பராயமற்றபிள்ளைகளாகிய1-4மனுதாரர்களுக்கு சென்றடைய வேண்டு மென்பதால் பராயமற்றவர்களின் அடுத்தநண்பனாக குமாரசாமி இராமச்சந்திரன் என்பவர் 17. 10. 2001ல் நியமனம் பெற்றுள்ளார் என்பதாலும்.

படிவம் 87ஏ யில் குடியியல் நடைமுறைக் கோவையின் 531 (1) (6) (11)ம் பிரிவின் பிரகாரம்மனுதாரர்களாகிய இறந்தவர்களின் நான்கு வாரிசுகளுக்கும் ஆஸ்திகள் அனைத்திலும் சமமான 1-4பங்கு உண்டென வாரிசுச் சான்றிதழ் கட்டளை வழங்கவேண்டுமென்றும் கோரியிருப்பதாலும்.

அக்கறை உள்ள எவராவது 2002ம் ஆண்டு மாசி மாதம் 28ம் திகதி முற்பகல் 9. 00 மணிக்குஇந்நீதிமன்றத்தில் தோன்றி ஏன் மேற் கூறியவற்றை ஏற்றுக் கொள்ளக் கூடாதென்பதற்கு ஏதாவது காரணம்இருப்பின் காட்டுமாறு இத்தால் வேண்டப்படுகின்றீர்.

2002ஆம் ஆண்டு தைமாதம் 21ம் திகதி

நீதிமன்றக் கட்டளைப் படி

**து. சிறீமோகன்**
பதிவாளர்
மாவட்ட நீதி மன்றம்
யாழ்ப்பாணம்
(4273)

வரைந்தது
எஸ். கந்தசாமி
(ஜே. பி. யு. எம்)
மனுதாரர்களின் சட்டத்தரணி

# இராசி பலன்

22-1-2002

(தை 9, செவ்வாய்)

அட்டமி மு.ப. 9.16 வரை

அச்சுவினி காலை 7.58 வரை

ராகுகாலம் - 3.35 - 5.05

சுபநேரம் - 11.05 - 12.35

அட்டமி நவமி

**மேடம்**

முயற்சி கைகூடும், உடல் நலம், செல்வாக்கு, பெரியோர் சந்திப்பு.

**இடபம்**

காரிய அலைச்சல், வாக்குப் பலிதம், சயனசுகக் குறைவு, பொருள் விரயம்.

**மிதுனம்**

தெய்வ நம்பிக்கை, காரிய அனுகூலம், தனவரவு, நல்ல வரவேற்பு.

**கடகம்**

பிறர் உதவி, தொழில் நன்மை, அதிகாரம், முயற்சி கைகூடும்.

**சிங்கம்**

சொத்துக்களால் கவலை, பிரயாணம், புதிய திருப்பம், முயற்சி தாமதம்.

**கன்னி**

எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், உடல் வியாதி, கடன்தொல்லை.

**துலாம்**

நண்பர்கள் உதவி, சௌக்கிய விருத்தி, சொத்துக்களால் நன்மை, காரிய ஜெயம்.

**விருச்சிகம்**

சகோதரர் உதவி, பிரயாணம், தொழில் விருத்தி, நோய் குணமடைதல்.

**தனுசு**

புத்திரரால் கவலை, தாழ்ந்த சுபாவம், தொழில் பலிதம், வியாதி.

**மகரம்**

சொத்துக்களால் நன்மை, உடல் சோர்வு, காரிய தாமதம், கற்பனை மிகுதி.

**கும்பம்**

பிரயாண நன்மை, தன வரவு, அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை.

**மீனம்**

தேவையற்ற விவாதம், அரச ஆதரவு, முயற்சி தாமதம், தனவிரயம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

# புலிகள் மீதான தடை நீக்கப்படாதவிடத்து சமாதான பேச்சுக்கு அனுமதியோம்

## மன்னார் மாவட்ட ஆயர்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் மீதான தடை நீக்கம் என்பதற்கு இன்னும் காலம் இருக்கிறது. பேச்சுக்கான சூழல் ஏற்படும் போது அது தானாகவே நீங்கும். அதற்கான காலம் வரும் வரை நாம் பொறுத்திருப்போம்.

அதேவேளை, இதனை முக்கியமற்ற விடயமாக நாம் கருதவில்லைஅத்துடன், புலிகளே தம் மீதான தடை நீக்கபடாத பட்சத்தில் பேசமுற்பட்டாலும் நாம் அதைஅனுமதியோம்.

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசப்பு ஆண்டகை நேற்று முன்தினம்யாழ் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவ ஒன்றியத்தினரின் அழைப்பின் பேரில்நல்லாயன் நடு நிலையத்திற்கு சென்றிருந்தார்.

தொடர்ந்து மாணவர்களுடன் சிறு கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார். அதில் சிறப்பாக சமாதான முயற்சிக்கு ஆயரின் பங்கு அவசியம் தேவை என்பது மாணவர்களால் வலியுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் ஆயர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசும் போது; சமாதானம் என்பது போரற்றநிலைஎனவரலாற்று ரீதியாக நாம் கூறிக் கொள்கிறோம். ஆனால், உள்ளநிறைவு தான் சமாதானம் இந்த உள்ள நிறைவுதான் எமது ஆன்மீகச் செல்வம்.

எனவே உள்ளம் திறக்கப்படும் போதுதான்சமாதானம் பிறக்கும். உள்ளம் மூடப்பட்டிருந்தால் சமாதானம் உருவாக வாய்ப்பில்லை. பழிவாங்கல், மனக்கசப்பு, வெறுப்புணர்வு போன்ற செயல்கள் தான் உள்ளங்களைமூடிவைத்துள்ளன. இவை தான் மனிதர்களின் மனங்களில் மன இறுக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவை அகற்றப்பட்டால் தான் சமாதானம் பிறக்க வழியுண்டு.

தமிழ் மக்களும் சிங்கள மக்களும் தங்கள் மனங்களை இறுக மூடிவைத்துள்ளனர். சமாதானம் பிறக்க வேண்டுமானால் மன்னிப்பு என்பது அவசியமானது.

பொங்கு தமிழ் நிகழ்வு சிறப்பானது. ஆர்வம் பெறுவதற்கும் தியாகம் செய்வதற்கும் காரணமாக அமைந்தது. நாம் நிறையச் செய்ய வேண்டும். சமுதாயம் எங்களுக்கு நிறைய நன்மைசெய்துள்ளது. எனவே மாணவர்களாகிய நீங்களும் சமூகத்திற்குநன்மை செய்ய வேண்டும்.

நாகரிகமான முறையில் சமாதானத்திற்கு அத்திவாரமிட்டு எமக்கான உதவிக் கரங்களைப் பலப்படுத்த வேண்டும். பழையதை மறந்து விட்டு தற்போது எம் கண் முன் இடம் பெறும் நிகழ்வுகளை சாதகமாக எடுத்து முன்னேற வேண்டும்.

பழைய தோல்விகளின் மூலம் புதிய பாடங்களை கற்று சமாதானத்தை எட்ட முயல வேண்டும். அவற்றுக்கான தூண்டுதல்களை வளர்க்க வேண்டும். புதிய நம்பிக்கையை வளர்த்து அதை அத்திவாரமாகக் கொண்டு சமாதானத்தை எட்ட வேண்டும் என்று குறிப்பிட்டார். (உ)

## ஜே. வி. பியின் அபாயகரமான

# இனவாத அரசியல் பிரசாரத்தை முறியடிக்க ஜனநாயக சக்திகள் முன்வர வேண்டும்

## புதிய ஜனநாயகக் கட்சி வேண்டுகோள்

(கொழும்பு)

பாராளுமன்ற அதிகாரத்தை நோக்கியபேராசையினால் பாரம்பரிய பேரினவாதக் கட்சிகளை விட மோசமான நிலைநின்று ஜே.வி.பி. இனவாத அரசியல் விஷத்தைக் கக்கி வருகின்றது. இது சிங்கள மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் புதிய தலைமுறையினரை இனவாதச் சேற்றுக்குள்இழுத்துச்சென்று வீழ்த்துவதாகவே அமைகின்றது.

எனவேநேர்மையானஇடதுசாரி ஜனநாயக சக்திகள் அனைத்தும் ஜே.வி.பி. யின் அபாயகரமான இனவாத அரசியல் எதிர்ப்பிரசாரத்தை முறியடிக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி. கா. செந்தில்வேல் மத்திய குழுக்கூட்டத்திறகுப் பின்வெளியிட்டுள்ளஅறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில், கடந்த ஏழு வருடகாலபொது ஜன ஐக்கிய முன்னணிஆட்சியில் மக்கள் எதிர்பார்த்த சமாதானத்தையும் பொருளாதார சுபீட்சத்தையும் பெற முடியாத நிர்க்கதியான சூழலிலேயே மாற்று வழியின்றி மக்கள் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை மீண்டும் பதவிக்கு கொண்டு வர நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இதற்கு நாட்டின்பெருமுதலாளித்துவ பழமைவாத ஆதீனவாத அரசியல் சக்திகளும் அந்நியக் கரங்களும் பூரண அனுசரணையும் ஆதரவும் வழங்கிக் கொண்டன.

இரட்டை அதிகார நிலை கொண்ட அரசியல் சூழலில் புதிய அரசாங்கத்திடம் அரசியல், சமாதான பொருளாதார மாற்றுத் திட்டங்கள் தெளிவாக இல்லாத சூழலில் மக்களது எதிர்பார்ப்புகள்எந்தளவுக்குநிறைவேறப்போகின்றன என்பது மிகப் பெரும் கேள்வியாகின்றது.

இருப்பினும் இவற்றைச் சிறிது பொறுத்திருந்து, மக்கள் நடைமுறையில் கண்டு கொள்வதற்கு விட்டுவிடுவதே பொருத்தமானதாகும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கானமுன்னெடுப்புக்களை பல மட்டங்களில் நடைமுறைகளாக்கி வருகின்றது.

இதன் மூலம் மக்கள் மத்தியில்குறிப்பாகவடக்கு- கிழக்கு மக்களிடையே புதிய நம்பிக்கைகள் எதிர்பார்ப்புகள் துளிர்விட்டுள்ளன.

இந்நிலை ஏறத்தாழ 1994 ஆம் ஆண்டின் பொதுஜனஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தின் ஆரம்ப செயற்பாடுகளையே நினைவூட்டுகின்றன.

சமாதான முன்னெடுப்புக்கள் எவரால் முன்னெடுக்கப்பட்டாலும் பேரினவாத ஒடுக்கு முறைகளுக்கும்யுத்தத்திற்கும் உள்ளாகி நிற்கும் தமிழ் மக்களின் பக்கத்தில் இருந்து வரும் எந்தவொரு இடதுசாரிக் கட்சியும் அவ்வாறான சமாதான முயற்சிகளுக்கு குறுக்கே நிற்க முடியாது.

சமாதானமுயற்சிகளை சீர்குலைக்கும் எந்தவொரு காரியத்திலும் எதன் பேராலும் சம்பந்தப்படக் கூடாது. அவ்வாறு நிதானமாக நடந்து கொள்ளாத எந்தவொரு இடதுசாரிக் கட்சியும்தன்னை அவ்வாறு அழைத்துக் கொள்வதற்கு அருகதை அற்ற கட்சியேயாகும்.

அந்த வகையில் ஜே.வி.பி. எடுத்துவரும் சமாதான எதிர்ப்புப் பிரசார இயக்கத்தின் மூலம் தான் ஒரு இடதுசாரிக் கட்சியல்ல என்பதை முழுமைப்படுத்தி நிரூபித்து நிற்கின்றது. அதன் மூலம் ஜே.வி.பி கடந்த காலத்தில் அணிந்து வந்த சிகப்பு அங்கிகளும் மாக்சிய முகமூடிகளும் கழன்றுள்ளன.

அதேவேளை பாராளுமன்ற அதிகாரப் பேராசையைநிறைவேற்றிக் கொள்ளப் பேரினவாதப் பாதையில் பயணிக்கும் மூன்றாவதுபாராளுமன்ற அரசியல் சக்தி என்பதை நிலை நாட்டியும் வருகின்றது.

இத்தகைய சீரழிந்த பிற்போக்கான நிலைப்பாட்டை ஜே.வி.பி ஏற்கனவே எடுத்துள்ளமையை எமது கட்சிபல வருடங்களுக்கு முன்பேகோடிகாட்டியிருந்தமையை இவ்வேளை நினைவுபடுத்திக் கொள்ள விரும்புகின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# யாழ்.விஞ்ஞானசங்கத்தின் கண்காட்சிப் போட்டி நாளை ஆரம்பமாகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பாடசாலைமாணவர்களிடையே வருடாந்தம் நடத்தும் விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டி நாளை23ம்திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகும்.

23,24,25 ஆகிய திகதிகளில் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும் இக்கண்காட்சிப் போட்டியில் யாழ்.மாவட்டத்திலிருந்து 25க்கும் மேற்பட்ட பாடசாலைகள் பங்குபற்றவுள்ளன.

இதில்யாழ்.பல்கலைக்கழகத்தின் கண்காட்சிப்பொருட்களும் IBMS கணணி நிறுவனத்தின் தகவல்தொழில் நுட்பக் கண்காட்சிப் பொருட்களும் பார்வைக்காக வைக்கப்படவுள்ளன.

யாழ்.விஞ்ஞான சங்கத்தின் தேர்வுத் தலைவரும் ஓய்வு பெற்ற யாழ் இந்துக்கல்லூரி அதிபருமான அ.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும் இப்போட்டியை யாழ்.இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஜெயராஜ் ஆரம்பித்து வைக்க கலாநிதி நா.சிவயோகன் நெறிப்படுத்துவார்.

இக்கண்காட்சிக்கான நுழைவுக் கட்டணம்மாணவர்களுக்கு 10ரூபாஎனவும் ஏனையவர்களுக்கு 20ரூபாஎனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

**கலந்துரையாடல்**

வலி. தெற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் இம் மாத இறுதியில் நடைபெறவுள்ளதால் இவ் விடயம் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை மு.ப 9.00 மணிக்கு உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைத்து அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு விளையாட்டு அலுவலர் பி. பாஸ்கரன் அறிவித்துள்ளார். (செ-10)

## அரசும் புலிகளும்

# இணக்கப்பாட்டிற்கு வரும் வரை உள்ளூராட்சி தேர்தல் நடத்தகூடாது

## த வி.கூ மத்தியகுழுக்கூட்டத்தில்தீர்மானம்

(கொழும்பு)

கிழக்குமாகாணத்தில் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளில் உணவுப்பொருட்கள் மருந்துகள், ஏனைய அத்தியாவசிய பொருட்களுக்கான தடை இப்போதும் இருந்து வருகிறது.

இத்தடை உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்று கோரும் தீர்மானம் நேற்று முன்தினம் கொழும்பில்நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்தியகுழுக் கூட்டத்தில் ஏகமனதாகஎடுக்கப்பட்டது-

மேலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

● தமிழ்மக்கள் தமது சொந்த மாவட்டங்களில் அல்லது வேறு மாவட்டங்களில் பிரயாணம் செய்யும்போது ஆட்பரிசோதனை, உடைமைகள் பரிசோதனை என்பவற்றால் பல நெருக்கடிகளுக்கும் இன்னல்களுக்கும் ஆளாகி வருகின்றனர்.

எனவே இப்போதுள்ள நடைமுறைகள் நீக்கப்பட்டு மக்களின் சுதந்திரமான போக்குவரத்துக்கு உறுதி செய்யப்பட வேண்டும்.

● ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் வேறுபொதுக் கட்டடங்களிலும் இப்போது நிலைகொண்டிருக்கும் படையினரை அவ்விடங்களிலிருந்து அகற்ற வேண்டும்.

● வடக்கு கிழக்கு தமிழ்ப் பகுதிகளுக்கு எரிபொருள் சீமெந்து, அத்தியாவசியப் பொருட்கள் முதலியவற்றை வழங்குவதில் உள்ளதடைகள் முழுவதும் நீக்கப்பட்டு நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ளதுபோல் இப்பகுதிகளிலும் அவற்றை வாங்குவதற்கு வழிவகுக்கப்பட வேண்டும்.

● தொடர்ந்தயுத்தத்தினால் வடக்குகிழக்கு பொருளாதாரம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு வடக்கு கிழக்கு மக்கள் விவசாயம் மீன்பிடி போன்ற தொழில்களைச் செய்வதற்கு எத்தகையதடையும் இருக்ககூடாது

(2 ஆம் பக்கம் பார்க்க)

# 85 வது ஆண்டு நிறைவு பெற்றுள்ள தியோகுப்பிள்ளை ஆண்டகையார்

யாழ் ஆயராக கடமையாற்றி கத்தோலிக்க மக்களிடையே, மாத்திரம் அல்லாது பிற சமய மக்களிடையேயும் நன் மதிப்பைப் பெற்ற இளைப்பாறிய யாழ் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை தனது 85 வது ஆண்டு நிறைவு விழாவை சென்ற 19 ந் திகதி கொண்டாடினார்.

ஆண்டகையின் வாழ்க்கைக் குறிப்பு கீழே தரப்படுகின்றது.

1917-பிறந்தார்.

1925:-புனித அந்தோனியார் கல்லூரியில் (ஊர்காவற்றுறை) கல்வி கற்கத் தொடங்கினார்.

1929:-யாழ் பத்திரிசியார் கல்லூரியில் கல்வி கற்கத தொடங்கினார்.

1935-உரோமை பாப்பரசரின் வேத போதக கல்லூரியில் சேர்ந்தார்.

1937:-தத்துவ இளமாணி பட்டத்தை அதே கல்லூரியில் பெற்றார்.

1940:-அதே கல்லூரியில் இறையியர் இளமாணி பட்டத்தைப் பெற்றார்.

1941:-உரோமையில் குருப் பட்டத்தைப் பெற்றார்.

1942:-உரோமையில் கலாநிதி பட்டம் பெற்றார்.

1943:-உரோமையில் திருமறைச் சட்ட கலைமாணி பட்டத்தைப் பெற்றார்.

1945:-தாயகம் திரும்பினார்.

1946:-யாழ் பேராலய உதவிப் பங்குத்தந்தையாக நியமனம் பெற்றார்.

1947:-அநுராதபுரம் புனித சூசையப்பர் கல்லூரி அதிபராக நியமனம் பெற்றார்.

1951:-கரவெட்டி திரு இருதயக் கல்லூரியின் அதிபராக நியமனம் பெற்றதுடன் கரவெட்டியின் பங்குத் தந்தையாகவும் கடமையாற்றினார்.

1952:-யாழ் ஆயரின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

1953:-இளவாலை புனித ஹென்றி அரச கல்லூரியில் ஆசிரியராக இணைந்தார்.

1954:-அதே கல்லூரியின் அதிபராக நியமனம் பெற்றார்.

1956:-கொழும்புத் துறை புனித சூசையப்பர் நிறுவனத்தின் இயக்குநர் ஆனார்.

1960:-கல்விப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

1963:-இளவாலை பங்குத் தந்தையாகவும் மறைக் கோட்ட முதல்வராகவும் கடமையாற்றத் தொடங்கினார்.

1966:-தனது குருத்துவ வாழ்வின் வெள்ளி விழாவைக் கொண்டாடினார்.

1967:-திருமறை துணை ஆயராக நியமனம் பெற்றார்.

1973:-யாழ் ஆயராக கடமையாற்றத் தொடங்கினார்.

1991:-மும்மடி விழாவை கொண்டாடினார்.

1992:-முதுமை காரணமாக சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

இலங்கையின் ஆயர் பதவிக்கு உயர்த்தப்பட்ட தமிழரான மறை மாவட்ட குரு இவர் என்பதும் புனித சவேரியார் குரு மடத்தை யாழ். கொழும்புத்துறையில் நிறுவி குரு மாணவர்கள் இங்கேயே தமது கல்வியைத் தொடர ஏற்பாடு செய்துள்ளார் என்பதும் பெரிய அளவில் ஏழை மக்களுக்கு உதவுவதற்காக மனித முன்னேற்ற நிலையத்தை நிறுவி அதன் மூலம் மக்களின் கல்வி சுகாதாரம், பாலர் கல்வி, கைத்தொழில் முயற்சி, சுய தொழில் திட்டம் ஆகியவற்றில் உதவி பெற வாய்ப்பளித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கப்டன் டீ.ஏ.எம்.குணசிங்கம்

# யாழ். தபாலகத்தில், வீடியோ நாடாக்கள் இன்று முதல் ஏற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். தபாலகத்தில் இன்று தொடக்கம் வீடியோ நாடாக்கள் ஏற்றுக் கொள்ளப் படவுள்ளதாகவும், காலை 9. 30 மணி முதல் மதியம் 12.30 மணிவரை இப்பணி இடம் பெறும் எனவும் யாழ்ப்பாணம் பிரதம தபாலதிபர் சி. மார்க்கண்டன் அறிவித்துள்ளார். (உ)

# கோப்பாயில் திறம்பட நடந்த நடமாடும் சேவை

(சுண்டுக்குளி)

புதிய அரசின் நூறாவது நாள் செயற்பாடுகளை முன்னிட்டு கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பேனாட் சில்வா வினால் ஒழுங்கு செய்யப்பட்ட நடமாடும் சேவைகள் கடந்த 20 ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி நினைவு மண்டபத்தில் காலை 9.00 மணி தொடக்கம் நடைபெற்றன

இவ் நிகழ்வில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி, குடும்பநல சேவை உத்தியோகத்தர்கள், ஆள் பதிவு திணைக்கள உத்தியேரகத்தர்கள், கோப்பாய் வைத்திய சாலை வைத்திய அதிகாரி, சுகாதார பரிசோதகர்கள், மருத்துவ மாதுக்கள், எனப் பலர் கடமையில் ஈடுபட்டனர்.

இந் நிகழ்வில் 500 க்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர். சுகவீனம் காரணமாகசிகிச்சைபெற வந்தவர்களில் ஒரு சிலர் உடனடியாகயாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மிகுதியானவர்களுக்குரிய மருந்துகளும் ஆலோசனைகளும் உடன் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து கிராம மக்களின் நல்லுறவை வளர்த்துக் கொள்ளும் முகமாக கோப்பாய் வடக்கு, தெற்கு, கிழக்கு கிராம சேவகர்கள் அணிகளுக்கிடையில் மென்பந்து, கிரிக்கெட் போட்டியும் நடாத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன. (உ-110)

# காணாமற்போனோர் பற்றிய விசாரணைகளுக்காக உறவினர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டில் 1996 1997ஆம்ஆண்டு காலப் பகுதிகளில் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற் கொண்டு வரும் விசேட புலனாய்வுப்பிரிவினர் பின்வருவோர் தொடர்பான விசாரணைக்காக அவர்களின் உறவினர்கள்,சாட்சிகள் முறைப்பாட்டுக்காரர்களை யாழ்.பொலிஸ் நிலையத்துடன் உடன் தொடர்பு கொள்ளுமாறும் விசாரணைக்கு வரும் போதுகாணாமற்போனோர் தொடர்பாக செய்யப்பட்ட முறைபாட்டுக் கொப்பி இறப்பு அத்தாட்சிப் பத்திரம் போன்றவற்றினை எடுத்து வருமாறும் அறிவித்துள்ளனர்.

- ஏ கே.ரகுமான்(கோ. இல.பி.ஐ-279 79பீச் றோட் குருநகர்.
- இராஜேந்திரன் தோமஸ் றூபன்(கோ.இல.பி.ஐ3 11) 32.செல்வர் வீதி,நல்லூர்
- மகேந்திரம் பாபு(கோ. இல.பி.ஐ-302)697 கச்சேரி-நல்லூர்றோட், யாழ்ப்பாணம்.
- முருகேசு ஜெயராசா (கோ-இல.பி.ஐ-305)10மல் வீதிகுருநகர்.
- இராஜரட்ணம் சிறிதரன் (கோ. இல. பி. ஐ- 460) டச்சு றோட், சோப்பாய்
- எஸ். அம்பிகை பாகன். (கோ. இல. பி. ஐ-434) இளவாலை தெற்கு.
- பாலன் சிவராசன்.(கோ. இல. பி.ஐ-475) மட்டுவில் கிழக்கு.
- துரைசிங்கம் செந்தில் நாதன்(கோ.இல.பி.ஐ9-45) 6வில்வம் றோட் அரியாலை
- சேவியதாஸ்றெல்ஜினோட் றூபதாஸ்கோ.இல.பி. ஐ973 310 பருத்தித்துறை வீதி நல்லூர்.
- நமசிவாயன் வலகேதீஸ்வரன்(கோ.இலபி.ஐ.9-143) வள்ளியம்மன் கோவிலடி அரியாலை.
- தங்கவேல் சந்திரகுமார் (கோ. இல. பி. ஐ-468) தனங்கிளப்பு றோட், சாவகச்சேரி
- தர்மலிங்கம் கருணாகரன் (கோ. இல. பி. ஐ-448) கைதடி' நாவற்குழி
- செல்லையா பாலதீபன் (கோ. இல. பி. ஐ-440) கைதடி, நுணாவில்
- தேவபாலன் தர்மபாலன் (கோ. இல. பி. ஐ-387) வீரபத்திரர் கோவிலடி சாவகச்சேரி
- யேசுதாசன் எமன்கிலோ (கோ. இல. பி. ஐ-404) 7 மத்தியூஸ் வீதி, குருநகர்
- மனுவல் அந்தோனி (கோ. இல. பி. ஐ-420) 26, மத்திய வீதி, குருநகர்

(உ-10)

# வடபகுதி இளைஞர் யுவதிகளின் நலன்கருதி தொழிற்பயிற்சி நிலையம்

## அமைக்க சர்வதேச தொழில் ஸ்தாபனம் முன்வருகை

(கொழும்பு)

நாட்டில் வாழும் பல்வேறு தொழிலாளர் வர்க்கத்தினருக்கும் தொழில் ரீதியான உதவிகளையும், கருவிகளையும் வழங்குவதற்கு சர்வதேச தொழில் ஸ்தாபனங்கள் முன்வந்துள்ளதாக தொழிலமைச்சர் மகிந்த சமரசிங்கா தெரிவித்துள்ளார்.

ஜெனிவா நகரில் சர்வதேச தொழில்ஸ்தாபனப் பணிப்பாளர் நாயகத்துடன் தொழிலமைச்சர் நடத்திய பேச்சுக்களை தொடர்ந்தேஇவ்வுறுதி கிடைத்துள்ளது.

வடபகுதியில் வாழும்இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சிநிலையம்ஒன்று அமைப்பதற்கு தேவையானநிதியுதவியினை வழங்குவதற்கும் அந்த ஸ்தாபனம் முன்வந்துள்ளது

வெளிநாடுகளில்பணிபுரியும் இலங்கையர்களின் நன்மை கருதி தகவல் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதோடு, தற்போதைய அரசாங்கத்தின் தொழிற் கொள்கைகள் தொடர்பாகவும் அமைச்சர், தொழில் ஸ்தாபனப் பணிப்பாளருக்கு விளக்கிக் கூறியுள்ளார். (உ-8)

# தெல்லிப்பழை ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவில் 100 பேருக்கு சிகிச்சை

(அளவெட்டி)

தெல்லிப்பழை அரசினர் பொது வைத்தியசாலைவெளி நோயாளர் பிரிவில் க்காய்ச்சலுகாக சிகிச்சைபெறவருவோர்களில் தினமும் நூறு பேர்களுக்கு மாத்திரமே இலக்கம் வழங்கப்படுவதாக பொது மக்கள தரப்பில் விசனம் தெரிவிக்கப் படுகின்றது.

அண்மைக்காலமாக காய்ச்சல்நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதனை அடுத்து, இவ் வைத்திய சாலைக்கு சிகிச்சை பெறச் செல்வோர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இதனாலேயே நோயாளர்களின் எண்ணிக்கையை மட்டுப் படுத்துவதற்காக இவ்வாறு குறிப்பிட்டளவு இலக்கம் வழங்கப்படுகிறது.

இதனால் சிகிச்சை பெறச் செல்லும் பல நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதனையும் அவதானிக்க முடிகிறது. (செ-237)

# நிர்வாகிகள் தெரிவு

(சுண்டுக்குளி)

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சமாசத்தின் வருடாந்த பொதுக் கூட்டம்அண்மையில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் அதன் தலைவர் கப்ரின் டி. ஏ.எம்.குணசிங்கம் தலைமையில் நடை பெற்றது.

இந் நிகழ்வில் நடப்பு வருடத்திற்கான உத்தியோகத்தர் தெரிவு இடம்பெற்றபொழுது தலைவராக கப்ரின் டி.ஏ. எம். குணசிங்கம், செயலாளராக கே.மனோகரன், பொருளாளராக கே.ஜெயராஜசிங்கம், உப தலைவராக வி.ரி. செல்வராஜா, கே.நாகேந்திரம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ-10)

★ ★ ★

(சுண்டுக்குளி)

வசந்தகான சபாவின் நிர்வாக சபைத் தெரிவு கடந்த 6 ஆம் திகதி இடம் பெற்றது.

இதன்போது மேற்படி சபாவின் தலைவராக வி. ரி. செல்வராசா, உபதலைவராக கி. மனோகரன், செயலாளராக க. சரவணமுத்து, பொருளாளராக செல்வி க. மிதிலா ஆகியோருடன் ஏழு சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (செ-110)

# ஜே. வி. பியுடன் இணைந்து செயற்பட பொ. ஐ. மு. விருப்பம்

(கொழும்பு)

மார்ச் மாதத்தில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி தனித்து போட்டியிட முடிவு செய்துள்ள போதிலும், அதனுடன் இணைந்து பொதுஜன ஐக்கிய முன்னணி போட்டியிட வேண்டும் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் மத்திய குழு உறுப்பினர்கள் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

புதிய இடதுசாரி முன்னணி, இடதுசாரிக்கட்சிகளை ஒன்றிணைத்து கூட்டிணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றியினை ஈட்டிக் கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்தின லங்கா சமஜமாஜக்கட்சி, கொம்பியூனிசக் கட்சி, தேசிய விடுதலை மக்கள் கட்சிகளுடன் உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்பு ஏற்படுத்தி போட்டியிடுவது தொடர்பாக கலந்துரையாட இருக்கின்றார். (உ-8)


## அறிவித்தல்

### அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

யாழ். மாவட்டத்தில் வட்டுக்கோட்டை உட்பட எந்தத் தொகுதிக்கும் உத்தியோக பூர்வமாக அமைப்பாளர்கள் எவரும் நியமிக்கப் படவோ அதிகாரமளிக்கப் படவோ இல்லை. எனவே உத்தியோக பூர்வமாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பாக ஆலோசனைக் கூட்டம் நடாத்த அனுமதிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நினைவுப் பணிக் குழு சார்பாகவும் எவரும் தமிழ்க் காங்கிரஸ் சார்பாக கூட்டம் கூட்டவோ நிதி கோரவோ அனுமதிக்கப்பட வில்லை என்பதை எமது அபிமானிகளுக்கும் ஆதரவாளர்களுக்கும் அறிவிக்கும் படி செயற்குழு பணித்துள்ளது.

கலாநிதி நல்லையா குமரகுருபரன்
பொதுச் செயலாளர்
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

(கி-3320)

## இன்று ஒரு தகவல்

# இன்பப் புதையல் எங்கே?

ஒருவெளிதேசத்தில் இருந்து ஒருவர் நமது நாட்டுக்குவந்தார். இங்கு ஒருவர் அவரை அன்பாகக் கூப்பிட்டு உபசரித்தார். ஒரு ஆரஞ்சுப்பழத்தை அவரிடம் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார். அவர் அதை வாங்கினார். அப்படியும் இப்படியும் புரட்டிப் பார்த்தார். அவரின் தேசத்தில் அது இல்லைப் போலும். என்ன செய்வதென்று தெரியவில்லை. கடித்துப் பார்த்தார். கசப்பாக இருந்தது. தூக்கி எறிந்துவிட்டார். 'ஏன் அதைத் தூக்கி எறிந்து விட்டீர்கள்? என்று கேட்டார் இவர். 'கசக்கிறது! அதை எப்படிச் சாப்பிடுவது? என்றார் அவர். அதை அப்படிச் சாப்பிடக் கூடாது. மேலே உள்ள தோலை எடுத்து எறிந்துவிடவேண்டும். இனிப்பான பகுதி உள்ளே இருக்கிறது.' என்று விபரம் சொன்னார் இவர். இப்படிச் சொன்னவர் ஒருயோகி.

'வாழவின் வெளிப்பக்கத்திலேயே இருந்து கொண்டிருந்தால் கசப்பான பிரச்சினைகளையே சந்திக்கவேண்டியிருக்கும். உள்பக்கத்துக்குப் போகவேண்டும். அப்போதுதான் அங்கேயிருக்கிற இனிப்பை உணரமுடியும்' என்கிறார் அந்தயோகி. நாமெல்லாம் இரண்டு வகையான வாழ்க்கை வாழ்கிறோமாம், மேலோட்டமான-வெளிப்படையாக உள்ள வாழ்வென்பது ஒன்று. உள்ளார்ந்த வாழ்வு என்பது ஒன்று. வாழ்வின் வெளிப்புறம் பிரச்சினைகளும் சவால்களும் நிறைந்தது. உள்புறம் அமைதியாக உள்ளது. இந்த உள்பக்கத்திலேதான் மகிழ்ச்சியான வாழ்வுக்குத் தேவையான புதையல் இருக்கிறதாம். யார் கண்டார் அப்புதையலை? ஆழ்நிலைத்தியானம் எல்லாம் செய்கிறார்களே... அது எதற்காக? அந்தப் புதையலைக் கண்டு பிடிக்கிறதற்காகத் தான்.

நாம் அந்த உள்ப்பக்கத்திற்குப் போய் அங்கேயுள்ள ஊக்க சக்தியையும், புத்திசாலித் தனத்தையும் பொறுக்கி எடுத்து அன்றாட வாழ்க்கையில் உபயோகப் படுத்தவேண்டும். மனம் ஒரு குரங்குமாதிரி அலைகிறது என்கிறோம். அதைக்கட்டுப்படுத்த முடியவில்லை என்கிறோம்! மனம் அலைவது உண்மைதான். தேனீ எதற்காக அலைகிறது? தேனுக்காக அலைகிறது. அதுமாதிரித்தான் மனதும்அலைகிறது. மகிழ்ச்சி-சாந்தி இவற்றைத் தேடி: மனதை உட்பக்கமாக அலைய விடவேண்டும். மகிழ்ச்சியான வாழ்வுக்கு என்னென்ன தேவை என்பதையும் அந்தயோகி சொல்கிறார். ஊக்கம், புத்திசாலித்தனம், அமைதி, சாந்தம் என்பனவெல்லாம் நம்மிடமே நமக்குள்ளேயே இருக்கின்றன. அதனாற்தான் சொர்க்கம் நமக்குள்ளேயே இருக்கிறது என்று சொல்வது, புதையலை நமக்குள்ளேயே வைத்துக்கொண்டு, அதைத் தேடிப் புலம்பிக்கொண்டிருப்பது மிகவும் வேடிக்கை என்கிறார் அவர். இவற்றையெல்லாம் கேட்கிறபோது உங்களிற் பலருக்கு கோபம்கூட வரலாம்.

'என்ன சார்இது? இன்று ஒரு தகவலில் ஏதாவது உபயோகமாகச் சொல்லுவீர்களென்று பார்த்தல்... என்னவோ தத்துவத்தைப் பேசிக்கொண்டிருக்கிறீர்களே' என்று நினைக்கலாம். இதுவும் உபயோகமான விஷயம்தான். நாம் தியானம் அது, இது என்று எதுவும் செய்யவில்லை என்றால்கூட, மனதில் அழுத்தமோ, இறுக்கமோ இல்லாமல் எப்போதும் சந்தோஷமாக இருக்கப் பழகிக் கொண்டால் போதும். ஏனென்றால் மன இறுக்கத்தினாலேயே பலவிதமான நோய்கள் வருகிறதாம். பெருவாரியான உடற்கோளாறுகளுக்கு வாழ்க்கையின் விரக்தியாலும் தோல்விகளாலும் ஏற்படுகிற மன இறுக்கம்தான் காரணம் என்பது மருத்துவ ஆராய்ச்சி முடிவு நான் இறுக்கமில்லாமல் இருப்பதற்குத்தான் பிரியப்படுகிறேன். இந்தச் சமூகம் அதற்கு இடம்கொடுக்கவில்லையே என்ன செய்வது என்பது சிலருடைய கேள்வி.

இந்தச் சமூகத்தை சரி செய்யவேண்டியதும் நாம் தான். நம்மைச் சரியாக்க வேண்டியதும் நாம்தான். நான் சரியாக இருக்கிறேன். சமூகம் சரியாக இல்லை என்று அதை ஒதுக்கிப் பிரயோசனமில்லை. ஒரு குடும்பத்தர் அவர் மனதில் எப்போதும் டென்சன் இல்லாமல் இருக்க பழகிவிட்டார். அவர் நான்ஒன்றும் ஆழ்நிலைத் தியானம் செய்யவில்லைஇருந்தாலும் எப்போதும்என் மனது அமைதியாகத்தான் இருக்கிறது. இவ்வளவுக்கும் எங்கள்வீட்டில் தினமும் என் சம்சாரத்திற்கும், எனது அம்மாவுக்கும் சண்டை நடந்துகொண்டுதான் இருக்கும்' என்பார் அதுசரி... உங்கள் அம்மா ஒருபக்கம்.. உங்கள் மனைவி ஒருபக்கம். அவர்கள் இரண்டுபேரும் சண்டை போடுகிறபோது நீங்கள் எந்தப்பக்கம் இருப்பீர்கள் என்று கேட்டார் ஒருவர் அந்தச்சமயம் நான் வீட்டுக்கு வெளிப்பக்கம் இருப்பேன் என்றார் அவர்.

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# நட்டஈடு வழங்குவதில் பாரபட்சம் வேண்டாம்
## வரதர் அணி அமைப்பாளர்

(மட்டக்களப்பு)

நாட்டில்போர் நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட்ட மட்டக்களப்புமாவட்ட தமிழ் மக்களுக்குரியஇழப்பீட்டுக் கொடுப்பனவுகள் வழங்குவதில் உள்ள பாரபட்சங்களை நீக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஈ.பி.ஆர். எல். எவ். வரதர் அணி தேசிய அமைப்பாளர் இரா. துரைரத்தினம் புனர்வாழ்வு மீள் குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இங்கு வாழும் முஸ்லிம் குடும்பங்களும் பெரும்பான்மை இனத்தவர்களும் உரிய இழப்பீடுகளை பெற்றுள்ளபோதிலும் தமிழ்க்குடும்பங்கள் புறக்கணிக்கப்பட்டு வருவதேன் என்ற கேள்வியையும் அவர் எழுப்பியுள்ளார்.

வன் செயல்கள் காரணமாக சொத்துக்களை இழந்தபொது மக்கள், அரச ஊழியர்களுக்கான இழப்பீடுகள், இறந்த, ஊனமுற்றோருக்கான கொடுப்பனவுகள், மீள தொழிலை ஆரம்பிப்பதற்கான கொடுப்பனவுகள் என்பவற்றை தமிழ்குடும்பங்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் வாழும் ஏனைய இன மக்களுக்கு இழப்பீடுகளைப் பெற்றுக் கொடுப்பது போல, தமிழ் மக்களுக்கும் வழங்குவதற்கு அவை சார்ந்த அமைச்சர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-8)

## கொழும்பில் தங்கியுள்ள
# வெளிமாவட்டத்தைச் சேர்ந்தோர் பொலிஸில் பதிய தேவையில்லை

(கொழும்பு)

கொழும்பு உள்ளிட்ட முக்கிய நகரப் பகுதிகளில் ஒரு வருட காலத்திற்கு மேலாக தற்காலிகமாக தங்கிவாழ்ந்து வரும் வெளிமாவட்டங்களை சேர்ந்தவர்கள்பொலிஸ்நிலையங்களில் பதிவு செய்யத் தேவையில்லை என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்கா நேற்று முன்தினம் பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்தோ அல்லது சட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்தோ கொழும்புக்கு வருவோர் மாதம் ஒருமுறை அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு சென்று தமது வாழ்விடத்தை உறுதிப்படுத்தி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய அரசின் சமாதான முன்முயற்சியாக இந்நடைமுறை கொண்டுவரப்பட்டதுடன்இதனைஎதிர்வரும்காலத்தில் முற்றாக நீக்குவதற்கும் ஆலோசனை செய்யப்பட்டு வருவதாக மேலும் அப்பத்திரிகைக்கு அமைச்சர் தெரிவித்துள்ளார். (உ-8)

## இயக்குநர் சபைக்கூட்டம்

(தென்மராட்சி)

அறவழிப் போராட்டக் குழுவின் இயக்குநர் சபைக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் மு. ப.11 மணிக்கு இடம்பெறவுள்ளதாக தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் தெரிவித்துள்ளார். (செ-77)

## அரங்கியல் மன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வசந்தகானசபாவின் கலைஞர் குழுவின் பங்களிப்பு மற்றும் அனுசரணையுடன், யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியின் திறந்த வெளியரங்கில் இன்று பி.ப 3.00 மணிக்கு அரங்கியல் மன்றம்நடைபெறவுள்ளது.

இதில் 10 க்கும் மேற்பட்ட இசை நாடகங்களின் முக்கிய பகுதிகள் உரிய ஆடை அலங்காரத்துடன் நடித்துக் காண்பிக்கப்படவுள்ளது. (உ)

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 27ஆம்திகதி கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மன்றத்தலைவர் இரா.ஜெயபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் சாவகச்சேரி நகரசபையின் செயலாளர் எம்.எஸ்.சரவணபவ பிரதம விருந்தினராகவும் நகரக் கிராம சேவையாளர் எஸ்.இராசரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் பங்குகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில்அமரர் நமசிவாயம் நினைவு புலமைப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளது. (செ-77)

## நல்லை ஆதீன கலாமண்டபத்தில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லைதிருஞான சம்பந்தர் ஆதீன கலாமண்டபத் திறப்பு விழாவினையொட்டி கடந்த சனிக்கிழமை தொடக்கம் இடம்பெற்றுவரும் முத்தமிழ் நிகழ்ச்சிகளில் நாலாம் நாளான இன்றைய நிகழ்வு மூதறிஞர் க. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆசியுரையை நயினை நாகபூசணி அம்பாள் தேவஸ்தான விசேஷ குரு பிரம்மஸ்ரீ வை.பரமசாமிக் குருக்கள் ஆற்றுவார்.

தொடர்ந்து வி.கே. கானமூர்த்தி குழுவினரின் மங்கல இசை மற்றும் பிரம்மஸ்ரீ எம். எஸ். சுந்தரின் வீணை இசை சங்கீத வித்துவான் சு. கணபதிப்பிள்ளையின் இசைக்கச்சேரி என்பன இடம் பெறவுள்ளன. (உ)

## தென்மராட்சியில் இருந்து விறகு எடுத்துவர படையினர் தடை

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் இருந்து கைதடி- கோப்பாய்பாதுகாப் புஅரணூடாக விறகு எடுத்து வருவதற்கு பாதுகாப்புப் படையினர் தடைவிதித்துள்ளனர்.

இதற்கு முன்னர் நாளாந்தம் சுமார் 100 விறகு வியாபாரிகள் சைக்கிள்களில் விறகினைக் கொண்டுவந்து விற்பனை செய்து வந்தனர்.

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள பயன் தரும் மரங்களை விறகு வியாபாரிகள் வெட்டி அழித்து வருகின்றனர் என சில கிராம சேவையாளர்களினால் பாதுகாப்புப் படையினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இத்தடை அறிமுகப்படுத்தப் பட்டதாகத் தெரியவருகின்றது. (உ-77)

## தற்கொலை புரிய முயன்ற பெண்ணினால் விமானம் இடையில் தரையிறக்கம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்துலண்டன் நோக்கிச் சென்று கொண்டிருந்த விமானத்தில் பிரிட்டிஷ் பெண் ஒருவர் தற்கொலை செய்ய முற்பட்டதால் விமானம் இடையில் தரையிறக்கப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வில்லியம் றொனால்ட் ஸ்கெய்ம் என்ற 49 வயது பெண் விமானத்தின் மலசல கூடத்திற்கு சென்று உடைந்த கண்ணாடித் துண்டினால் கழுத்தில் வெட்டி தற்கொலை செய்ய முயற்சித் துள்ளார்.

பின்னர் விமானத்தில் சென்று கொண்டிருந்த டாக்டர் ஒருவர் இவரைத் தடுத்து நிறுத்தி காயத்திற்கு மருந்து கட்டி சிகிச்சை செய்துள்ளார்.

இச்சம்பவத்தை அடுத்து துருக்கி தலை நகரில் ஸ்ரீ லங்கன் ஏயர் லைன்ஸ் விமானம் அவசர அவசரமாக தரையிறக்கப்பட்டு இரண்டுமணி நேரத்தின் பின்னர் மீண்டும் பிரிட்டன் சென்றுள்ளது. (உ-7)

## லொறி விபத்து

(கொழும்பு)

மாரவில்லமூடுகட்டுவ பகுதியில் தொடராக சென்று கொண்டிருந்த 4 லொறிகள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இரண்டுபேர் பலியானதுடன் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர். பொலிஸார் தீவிர விசாரணைகளைமேற்கொண்டுள்ளனர். (உ-7)

## வேம்படி பாடசாலை இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஜீ. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பிடும் பணிக்காக மூடப்பட்டிருந்த வேம்படி மகளிர் கல்லூரி இன்று முதல் மீண்டும் திறக்கப்படவுள்ளது. (உ)

## மூடப்பட்டுள்ள ப.நோ.கூ.சங்கங்களை திறக்க கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளின் விடுவிக்கப்படாத பிரதேசங்களில் பல வருடங்களாக மூடப்பட்டு இருக்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை கால தாமதமின்றி உடனடியாக திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணி அரசிடம்கோரிக்கை விடுக்கவுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுக் கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை திறந்து விடுவதனால் மக்களின் அன்றாட அத்தியாவசியப் பொருள்களை கட்டுப்பாட்டு விலையில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் இக் கூட்டத்தில் கருத்துக் கூறப் பட்டது. (உ-8)

## சிந்தனைக்கு விருந்து

### தட்டுத் தடுமாற்றம் கொண்டார்

ஆண்டு பலவாய் அவரிவரைக் கெஞ்சி மிக
வேண்டியே 'ஜே.பி' யாம் பட்டத்தைப் - பூண்டபினர்
பட்டத்திற் கேற் காப் பலதீமை செய்ததவர்க்குத்
தட்டுத் தடுமாற்றே தான்.

'பழையவன்'

## இந்திய சிறந்த அழகியாக 21 வயது நெகா ரூபியா

(புதுடில்லி)

இந்தியாவின் இவ்வாண்டின் சிறந்த அழகியாக புதுடில்லியைச் சேர்ந்த 21 வயது நெகா ரூபியா தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

''யுனெஸ் இந்தியாயுனிவேஸ்'' என்ற அமைப்பினால் நடத்தப்பட்ட இந்த அழகுப் போட்டியில் பட்டதாரியான இவர் தெரிவு செய்யப்பட்டு நேற்று முன் தினம் அவர் இந்திய அழகியாக முடிசூடிக் கொண்டார்.

இப் போட்டியில் 26 அழகிகள் பங்கு கொண்டனர். மும்பாயைச் சேர்ந்த 22 வயதான சுர்திஸ் சர்மா இரண்டாவது அழகியாகத் தெரிவு செய்யப் பட்டார். (ந-5)

## அமெ.கூட்டுப்படைத்தளபதி மத்திய கிழக்கிற்கு விஜயம்

(வாஷிங்டன்)

அமெரிக்க கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் றிச்சாட் றியாஸ் அரேபியக் குடியரசு, மற்றும் ஜோர்தான் ஆகிய மத்திய கிழக்கு நாடுகளுக்கான விஜயத்தை மேற் கொண்டுள்ளார்.

எதிர் வரும் வியாழக்கிழமை இவர் மீண்டும் அமெரிக்கா திரும்பவுள்ளார்.

பயங்கரவாதத்திற் கெதிரான அமெரிக்காவின் திட்டத்திற்கு தாம் ஆதரவு வழங்குவதாக அந்த நாடுகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-7)




ஐ. டி. எப். கிண்ணடென்னிஸ்

## அரையிறுதிப் போட்டிக்கு இலங்கையரும் தெரிவு

(கொழும்பு)

ஐ.டி.எப் கிண்ணத்துக்காக நடைபெற்று வரும் டென்னிஸ் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் அரை இறுதிப் போட்டிக்கு இலங்கையரான ஹர்ஸன கொடமான்னதெரிவாகியுள்ளார்.

இன்னுமொரு இலங்கையரான அம்ரித் ரூபசிங்கவை கால் இறுதிப் போட்டியில் எதிர்த்தாடிய ஹர்ஸன 5:7, 6:3, 6:3 என்ற புள்ளி அடிப்படையில் அவரை வெற்றி கொண்டதன் மூலமாக அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

பெண்கள் பிரிவில் அரையிறுதிப் போட்டியில் பிரான்ஸில் வசிக்கும்இலங்கையரான உதத்விநார ஹென்பிட்டகே எவரும் எதிர்பாராத விதமாக இந்திய வீராங்கனை வந்தனா முரளியை 6:3, 6:1 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார். (உ-10)

## 22 ஓட்டங்களால் இந்திய அணி வென்றது

(புதுடில்லி)

இந்திய இங்கிலாந்து அணிகளுக்கிடையே இந்தியாவில் கடந்த 19 ஆம் திகதி இடம் பெற்ற முதலாவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணி 22 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 281, ஓட்டங்களை பெற்றது.

பதிலுக் குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து259 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதில் இங்கிலாந்து அணி சார்பாக ஆரம்ப துடுப்பாட்டக்காரர் கிக் 121 ஓட்டங்களை பெற்றார். இவ்விரு அணிகளுக்கிடையேயான 2 வது போட்டி இன்று இந்தியாவில் இடம்பெறவு ளது. (உ-10)

## விளையாட்டு அரங்கு புனரமைப்பு

(ஏழாலை)

மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு அரங்கு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் புனரமைக்கப்படுகின்றது.

இப் புனரமைப்பு வேலைகளுக்கான நிதி, இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சினால் வழங்கப்பட்டது. (செ-12)

வாழ்த்துக்கள்

## வந்து குவிவு

(கொழும்பு)

மிகவும் இளம் வயதில் குறைந்த டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 400 டெஸ்ட் விக்கெட்டுக்களைப் பெற்ற முத்தையா முரளிதரனுக்கு வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்த வண்ணம் உள்ளன.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் அமைச்சர்களான ஏ.எச்.எம். அஸ்வர், பெ. சந்திரசேகரன் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, கொழும்பு மாநகர சபைஉறுப்பினர் ஆஸாத்ஸாலி உட்பட பல வர்த்தகப் பிரமுகர்கள், கிரிக்கெட் நலன் விரும்பிகள் உட்பட பலரிடம் இருந்தும் வாழ்த்துக்கள் வந்த வண்ணம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## ஹொக்கி பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் ஹொக்கி விளையாட்டிற்கான பயிற்சிகள் இன்று மாலை 4.30 மணிக்கு பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (உ-19)

## ஓய்வு பெறுகிறார்

(யாழ்ப்பாணம்)

பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் பதவியிலிருந்து கே. சிவஞானசுந்தரம் இம் மாதம் 26 ஆம் திகதி முதல் ஓய்வுபெறவுள்ளார். (து-8)

## அமெரிக்க ஹெலிஹொப்டர் ஆப்கானில் வீழ்ந்து நொருங்கியது

(காபூல்)

ஆப்கானில் அமெரிக்க ஹெலிகொப்டர் ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் அமெரிக்க விசேட படையினர் இருவர் கொல்லப்பட்டனர். 5 பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் ஆப்கானிஸ்தானின் பக்ரம் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச்சென்ற மேற்படி ஹெலிகொப்டர் விமான நிலையத்திலிருந்து 60 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் சென்று கொண்டிருக்கையில் திடீரென வீழ்ந்து நொருங்கியுள்ளது.

சீரான காலநிலை காணப்பட்ட போதும் விமானம் வீழ்ந்து நொருங்கியமைக்கான காரணம் இதுவரை தெரியவில்லையென அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளியன்று இரண்டு அமெரிக்க விமானங்கள் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதுடன், கடந்த சிலவாரங்களாக அமெரிக்க விமானங்கள் விபத்துக்குள்ளாவது அதிகரித்துவருவதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு விமானங்கள் விபத்துக்குள்ளாவது இயந்திரக் கோளாறா? அல்லது தீவிரவாதிகளின் தாக்குதலா? என்பதை தெரிவிக்க அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் பின்னடிப்பது பலருக்கும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. (உ-5)

# உலக தரிசனம்

## இந்திய நாடாளுமன்றை தாக்கிய பாகிஸ்தானியர் மீது வழக்கு தாக்கல்

### முஷாரப் கனடாவிடம் தெரிவிப்பு

(இஸ்லாமபாத்)

இந்திய நாடாளுமன்றத்தைத் தாக்கிய பாகிஸ்தானியர்கள் மீது அரசு வழக்குத் தொடுக்குமென்று பாகிஸ்தான் அதிபர் கூறியதாக கனடியத்துணைப் பிரதமர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் விஜயத்தை முடித்துக் கொண்டு புதுடில்லி புறப்படும்வேளையில் செய்தியாளர்களிடம் இது தொடர்பாகத் தெரிவிக்கையில், இந்தியாவும் பாகிஸ்தானும் கடுமையாக இது விடயத்தில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை விடுத்து பேச்சு வார்த்தைகளில் இறங்க வேண்டும் என்று தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் இந்திய, பாகிஸ்தான் பிரச்சினை விரைவில் முடியுமென்றும் இதனால் தென் கிழக்காசியாவில் சமாதானம் நிலவும் என்றும் இதனையே கனடாவும் விரும்புவதாக துணைப்பிரதமர் ஜோன் மெண்டிஸ் கூறினார். (து)

## கங்கை கொண்ட சோழபுரத்தை உலக மரபுச் சின்னமாக அங்கீகரிக்க பரிந்துரை

(தஞ்சாவூர்)

காஞ்சி கைலாயநாதர் கோயில், கங்கை கொண்ட சோழ புரக் கோயில், செஞ்சி கோட்டை ஆகியவற்றைஉலக மரபுச்சின்னங்களாக அறிவிக்கும்படி யுனெஸ்கோ அமைப்புக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

தஞ்சை பெரியகோயில்பராமரிப்பு வேலைகளைப்பார்வையிட்ட தொல்லியல் ஆய்வுத் துறைக் கண்காணிப்பாளர் கே. சி. நரசிம்மன் இத் தகவலை வெளியிட்டார்.

தஞ்சைப் பெரிய கோயில், மாமல்லபுரம் குடைவரைக் கோயில் என்பன உலக மரபுச் சின்னங்களாக அறிவிக்கப் பட்டதால் பெருமளவு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதாகவும் நாளடைவில் இக் கோயில்களும் சுற்றுலாப் பயணிகளால் கவரப்படுமென்று தெரிவித்தார். (து)

## பாகிஸ்தானிற்கு எதிரான இந்திய நடவடிக்கைகள் வெற்றியளிக்கும்

### அத்வானி நம்பிக்கை

(மும்பை)

பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியாவினால் எடுக்கப்பட்டு வரும் ராஜ்யதுறை நடவடிக்கைகள் மற்றும் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதற்கான போராட்டம் வெற்றியைத் தருமென்று இந்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிலிருந்து திரும்பிய பின் மும்பையில் பொதுக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்துகையில்,

பாகிஸ்தான் சிம்லா உடன்படிக்கையைப் பின்பற்றாவிடில் கடுமையான விளைவுகளை அது எதிர் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை இந்தியா பாகிஸ்தானிடம் கொடுத்த 20 பயங்கரவாதிகள் பட்டியலில் தாவுத் இப்பிராகீமை இந்தியாவிடம் திருப்பி ஒப்படைப்பது ஒரு முன்னேற்ற நட வடிக்கையாக இருக்குமென்று அத்வானி தெரிவித்தார். (து)

## மேற்குக்கரை நகரினுள் 70 டாங்கிகள் சகிதம் இஸ்ரேலியர் நுழைவு?

(ஜெருசலேம்)

மத்தியகிழக்கு மேற்குக் கரை நகரமான டல்காமுக்கு வடக்கே பலஸ்தீன ஆட்சிக்கு உட்பட்ட கிராமத்திற்குள் நேற்று முன் தினமிரவு இஸ்ரேலியரின் டாங்கிகள் நுழைந்துள்ளதாக நேரில் கண்டவர்கள் கூறிய போதிலும் இஸ்ரேல் அதை முற்றாக மறுத்துள்ளது.

எக்டாவா என்ற கிராமத்தில் 70 டாங்கிகள் நுழைந்ததாக அதனை நேரில் கண்டவர்கள் கூறியுள்ளனர்.

எனினும்இஸ்ரேலியப்படையின் பெண் பேச்சாளர் இதனை மறுத்துள்ளதுடன் மேற்குக்கரையின் 5 பிரதேசங்களில் இஸ்ரேலிய டாங்கிகள் நடத்தும் பயிற்சியினையே இவர்கள் தவறுதலாக இவ்வாறு கூறுகின்றனர் என தெரிவித்துள்ளார்.

இதே வேளை, நேற்று முன் தினம்அதிகாலை 'றமழாவில்' இடம் பெற்ற இஸ்ரேலியரின் தாக்குதலில் பலஸ்தீன இராணுவத்தினரின் வானொலி நிலையம் முற்றாக அழிந்துள்ளது. (உ-7)

## சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன

(ஏழாலை)

ஊனமுற்ற மூவருக்கு தெல்லிப்பளைபிரதேச செயலகத்தினால்அண்மையில் சக்கர நாற்காலிகள்வழங்கப்பட்டன. (செ-12)

## வெளிவாரி மாணவர்களின் பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் வெளிவாரிப்பட்டதாரிகளுக்கான பட்டமளிப்பு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இவ்விழா கடந்த ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகி இருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-19)

## நிருவாகசபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கராட்டிச் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பி. ப 3. 30 மணிக்கு யாழ். செயலகத்தில் உள்ள விளையாட்டுத்துறை அதிகாரியின் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து நிர்வாக சபைஉறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் அ. டினோஸ் அறிவித்துள்ளார். (செ10)

# சமூகத்தினிடையில் மறைந்துவரும் மகிழ்ச்சிகளும் மீட்டெடுத்து மலரவைக்கும் முனைப்புகளும்

கே. எஸ். ஞானமூர்த்தி
இணுவில்

சந்தடி மிக்க இந்த உலகில் மனிதன் பல அரிய சாதனைகளைப் படைத்தாலும், பொதுவாகவே வாழ்க்கை அமைதியற்ற நிலையிலேயே சென்று கொண்டிருக்கிறது. மகிழ்ச்சியைப்பெற்றுக்கொள்வதற்காக வேவாழ்க்கைஅமைகிறது என்ற தத்துவம் நடைமுறையில் எவ்வளவு தூரம் வெற்றியளிக்கிறது? பல்வேறு துறைகளிலும் வசதிகளையும் சாதனங்களையும் உள்ளடக்கிய மேலைத்தேய நாடுகளில் கூட அமைதியான மகிழ்ச்சியைத் தேடியே குழம்பிக் கொண்டிருக்கின்றனர். உல்லாசப்பயணிகளில் பெரும்பாலானோர் மன அமைதியுடன் சேர்ந்த மகிழ்ச்சியைத் தேடியே கிழக்கு நோக்கிவருவதாக அந்நாட்டுச் சஞ்சிகைகள் குறிப்பிடுகின்றன. எனினும் எமது தாயகத்தில் ஏற்பட்டுள்ள இனவன்முறையினால் மக்கள் மகிழ்ச்சியற்ற நிலையிலேயேநாடு விட்டு ஓடுவதும் சொந்த இடங்களிலேயே அகதிகளாக்கப்படுவதும்இருப்பிடங்களுடன்சொத்துக்கள் அழிந்து போவதும் மகிழ்ச்சியினை நாளுக்கு நாள் நசுக்கிக்கொண்டே போகிறது.

தனி மனித வாழ்விலும், குடும்ப வாழ்விலும், பொது வானகூட்டுவாழ்விலும் குழப்பநிலையிலும்கூட ஓரளவுக்கேனும் மகிழ்ச்சியை எப்படி உருவாக்கலாம்? மகிழ்ச்சியென்பது அருமையான பெருமதி மிக்க ஒன்று. சந்தோசமற்றநிலையைத்தூக்கிஎறிந்து இயன்றளவு மகிழ்ச்சியைப் பெறுவதற்கு ஒரு சில வழிவகைகளைத் தெரிந்திருப்பது அவசியம். முதலாவதாக குறைந்த பட்சம் பொது அறிவை உள்ளிட்டாதாரண கல்வியறிவோ அல்லது அனுபவஅறிவோ அவசியம். ஏனெனில் கண்ணியமான மனப்பான்மை அடிமனதில் இருந்தால் தான் மகிழ்ச்சியினைத் தேக்க முடிகிறது. அது நாம் செய்யும் வேலைத்திறனிலும் எம்மைச் சுற்றியுள்ள உலகத்தைப்பற்றி அறிந்து கொள்ளும் ஆவலிலும் வியாபிக்கிறது.

மனிதன் மனத்தை இழக்கும் வரை உலகில் எதையுமே இழப்பதில்லை என்கிறார் ஓர் ஆங்கிலக் கவிஞர். மனித இயக்கங்கள் யாவும் மனதின் கட்டுப்பாட்டின் கீழேயே இயங்குகின்றன என்பது வெளிப்படை. மனமகிழ்ச்சி என்பது தற்செயலாக ஏற்படுவது ஒன்றல்ல; அல்லது கொடையுமல்ல. நாங்களாகவே எம்மிடம் ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு நிலையாகும்.

### ஆடம்பரம்

உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படுத்த முடியாமல் எத்தனையோ விதமான இன்ப நுகர்வுகளை ஏற்படுத்தி அனுபவித்தாலும் அவையாவும் போலி இன்பங்களாகவே உருவெடுக்கின்றன. இன்று நம் நாட்டில் பண்பாட்டின் கோலங்கள் பலமிழந்து மேலைத்தேய ஆடம்பரங்களின் தாக்கங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. புலம் பெயர்ந்து வெளி நாடு சென்றவர்கள் ஒரு புறம், சென்று திரும்புவர்கள்மறுபுறம், இவர்களால் ஏற்படும் பண்பாட்டு நாகரிக யாற்றங்களாலும் சொந்த மண்ணில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களும் குழப்பமடைகின்றனர். பொருளாதாரத்தை மையமாக வைத்தே குடும்ப உறவுகளையும், தொடர்புகளையும் ஏற்படுத்துபவர்களின் மன வோட்டங்கள் அதிகரித்தே காணப்படுகின்றன. பொதுவாக அடிப்படைத்தேவைக்கு மேற்பட்ட எல்லா ஆடம்பரங்களின் போக்கும் நிதானமான அமைதியான மகிழ்ச்சியைஏற்படுத்தமுடியவில்லை பொதுவாகச் சொல்வதென்றால் பெரும்பாலான மனிதர்கள் ஏழைக் கூட்டத்தினின்று தாங்கள் வேறுபட்டவர்கள் என்பதைக் காட்டிக்சொள்ளும் காரியங்களுக்குத்தான் சேமிப்பின் ஒரு பகுதியைச் செலவு செய்து காண்பிக்கிறார்கள். அவை உடனடியாக ஏற்படுத்தும்மகிழ்ச்சிபோன்ற மயக்கநிலை நீடித்த அமைதியான இன்பத்தை உருவாக்குவதில்லை.

### தூய அன்பு

இரு உள்ளங்களின் மகிழ்ச்சிப் பரி மாற்றமே அன்பு. வீடுகளைத் தனித்தனியாகவேகட்டினாலும் இதயங்கள் ஒன்றாகவே இருக்க வேண்டும். இதயங்கள் பிரிந்து வாழும் மாளிகைகளை விட ஒன்றித்து மகிழும் குடிசைகள் மேலானவை. சிலர் செல்வனாக இறப்பதற்காக தேடித்தேடி சேமித்து வறுமையாகவே வாழ்ந்து முடிகின்றனர். வாழ்க்கை என்பது நல்லுறவும் உறவுகள் கலந்த செயற்பாடுகளுமாகும். உறவு எத்தகையது என்று விளங்காத போது, உறவுகள் குழப்பமடையும் போது மன நிறைவைத் தவிர வேறு வழிகளை பலர் நாடுகின்றனர். இந்நாட்டங்கள் காலப் போக்கில் பல தீய வழிகளுக்கு இட்டுச்செல்கின்றன. நல்லவை போன்ற தோற்றத்தை ஆரம்பத்தில் காண்பிக்கும் மனமகிழ்வுகள் ஈற்றில் துன்பத்துக்கே வடிகால்களாகி விடுகின்றன.

நன்றாக வேயப்படாத கூரையால் நீர் உட்புகுவது போல நல்ல நேய மற்றோர் உறவால், பண்படுத்தப்படாதவர்களின்சேர்க்கையால் குடும்ப மகிழ்ச்சிகள் பலமிழக்கின்றன. மனச்சந்தோசத்திற்கும், தோல்விகளின் தொங்கல்களுக்கும் இடையில் உள்ள நேர இடைவெளிகளை ஆராய்ந்தால் சில உண்மைகள் தெரிய வரும். சிறுகுழந்தைகள் கூட சில வேளைகளில்தான்மகிழ்வுடன் இருக்கிறார்கள். உரியஆதரவு கிடைக்காத சில தருணங்களில் மனச் சோர்வடைகின்றனர். போதிய ஆதரவும் அன்பும் தான் சிறுவர்களின் மகிழ்ச்சிக்கு முக்கியமானதாகும்.

ஏகாந்தமாய் இருப்பது இன்பமென்று சில இளவயதினர் தங்களுக்குள் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் அனேகர் தனிமையில் இருக்கும் போது நேரம் செல்லச் செல்ல சிலருக்கு பைத்தியமான உணர்வு ஏற்படுகிறது. சிலர் எவ்வித பிரயோசனமுமின்றி நேரத்தை வீணடிக்கிறார்கள் சிலர் தனிமையில்தங்களின் கடந்த காலத் தவறுகளை நினைத்தோ அல்லது தவறான தெரிவுகளை நினைத்தோ வருந்துகின்றனர். வேறு சிலர் கூடுதலாக மது அருந்துவதிலும், கூடுதலாகக் கதைத்து பொழுது போக்குவதிலும் இன்பமிருப்பதாகக் கருதி முடிவில் துன்ப உணர்வுகளில்சிக்கித்தவிக்கின்றனர். அதிகமது அருந்தியதாக்கத்தினாலும், போதைப் பொருள் பாவனையினாலும், எத்தனையோ இளைஞர்கள் முதுமையடைந்தவராக தெரிவது கண் கூடு.

இருந்தும் இந்த உலகத்தில் சராசரி பதினாறுக்கும் மேற்பட்ட ஆணோ, பெண்ணோ தன் வாழ்வில் ஏற்பட்ட அல்லது ஏற்படும் என்று நினைக்கின்ற இன்ப நிகழ்வினை எண்ணி தமக்குள் கனவுநிலையில் மகிழ எத்தனிக்கின்றனர் சிலர் ஒரு அறைக்குள் இருந்தும், சிலர் பலர் முன்னிலையிலும் கூட இந்த உணர்வில் இருப்பதைக்காணலாம். ஆளுமை போதிய அனுபவம்

நியாயமான தீர்மானம் உயிர்த் துடிப்பான அன்பு, தெளிந்த வீரம், சுயமதிப்பீடு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, தவறுகளை ஒத்துக் கொள்ளும் பண்பு இவைகள் மகிழ்ச்சியை திரட்டுவதற்கான கருவூலங்கள். யாவர்க்கும் தீமை செய்யாமையே உண்மையான மகிழ்ச்சியாகும்.

### கண்ணியமான இலட்சியம்

எந்தப் பெண்ணுக்கும் மகப்பேற்றின் போது வலி ஏற்படுவது இயற்கை. ஆனால் அவள் குழந்தையைக் கையில் அணைத்துக் கொஞ்சும்போது மகப்பேற்றின் போது ஏற்பட்ட வலியை மறந்துவிடுகிறாள். அதுபோல்நல்ல நிலையான மகிழ்ச்சியே இலட்சியமாகி விட்டால் இடையில் ஏற்படுகின்ற தோல்விகள் துயரங்கள் பெரிதாகித் தெரிவதில்லை சிந்தனை அதை நோக்கியே சுற்றுகிறது.

பெரிய இலட்சியத்துக்காய் ஒன்று கூடி போராடும் சமூகத்தில் யுத்த மேகங்கள் சூழ்ந்த போதும் பதுங்கு குழிகளிலும் பாச ஊற்றுக்கள் சுரப்பதை அவதானிக்கலாம். உண்மையான அமைதியும், மகிழ்ச்சியும் உள்ளே இருந்து தான்வர வேண்டும். காணியையும் நகை நட்டுக்களையும், காசையும் வாரிக்கொடுத்துவிட்டு அவருக்கு மட்டுமல்ல அவர்களின் எல்லாவற்றிற்கும் காலில் விழுந்து வணங்கினால் தான் கணவன் என்ற அந்தப் பொருள் கழுத்துக்கே வருமென்றால் நான் கலியான சந்தைக்கு வரவிரும்பவில்லை அம்மா! என்றொரு பெண்ணின் குரல் கேட்டேன். இது காலத்தின் கட்டாயம் எனத் தாய் முணுமுணுப்பதும், இப்படிப்பட்ட மணவாழ்வுகள் இனிய மகிழ்வுதரும் என்பதும் சந்தேகமே;

உடலுறவைப் பெற ஆண் அன்பைத் தருகிறான், பெண்ணோ அன்பைப் பெற உடலுறவைத்தருகிறாள் என்பதே பொதுவான கொள்கையாகும். ஒருவருமே மகிழ்ச்சியுடன் பிறப்பதில்லை என்றார் எரிக்போமன் என்ற உளவியல் மேதை. அது எமது உள்ளத்திலேயே உருவாகி நிறை வேற்றப்படும் ஒன்று என்பது அவர் கருத்து. இந்த வழியைத் தெளிந்த அன்பின் மூலமாகவும் உண்மைக் காரணிகளாகவும் இஷ்டம்போல் நிர்மாணித்துக்கொள்ளலாம். சிலர் தமக்கிருக்கும் ஆளுமையினையும், ஆற்றலினையும் அறியாதவராகித் துன்பமுறுகின்றனர். அப்படியானவர்கள் தம்மனத்தில் திடசித்தத்தையும், அன்பினையும், ஏற்றுக்கொண்டால் ஓரளவுக்காவது மகிழ்ச்சியடையலாம்.

(தொடரும்)

---

## சமாதான ஒளி தென்பட்டுள்ள இவ்வேளையில்

# இறைவனின் பிள்ளைகளாகிய நாமனைவரும் அதன் கருவியாக செயற்பட வேண்டும்

## யாழ்.வந்த பாப்பரசரின் பிரதிநிதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்கள் 20 வருடங்களுக்கு மேலாக பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இக் கொடுமையான யுத்தத்தினால் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளதுடன், பலர்மனப்பாதிப்புக்குள்ளான நிலையில் எதிர்கால வாழ்வுகுறித்த அச்சமும் அவர்கள் மத்தியில் எழுந்துள்ளன.

பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி மேதகு தோமஸ் யேசெங் நாண் ஆண்டகையின் யாழ்ப்பாணத்துக்கான வருகையை முன்னிட்டு நேற்று மாலை அவருக்கு பொது வரவேற்பு ஒன்று யாழ். மரியன்னை பேராலயத்தில் இடம்பெற்றது.

முன்னதாக மாலை ஆயர்களின் கூட்டுத் திருப்பலி இடம் பெற்றது. திருப்பலியின் பின்னர் மரியன்னை பேராலய அரங்கில் யாழ் கத்தோலிக்க அனைத்து பங்கு மக்களினதும் ஒன்று கூடலுடன் மகத்தான வரவேற்பு விழா இடம் பெற்றது.

யாழ் ஆயர் அதிவண தோமஸ் செளந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாப்பரசரின் பிரதிநிதி தோமஸ் யேசெங் நாண் இவ்வாறு குறிப்பிட்டார்.

பல்லாயிரக் கணக்கான மக்கள் குழுமி பாப்பரசரின் பிரதிநிதிக்கு நல்வரவேற்பு அளிக்கப்பட்டு ஆயருக்கான வாழ்த்து மடல் வாசிக்கப்பட்டு, தமிழ் முறைப்படி பொன்னாடை போர்த்தப்பட்டது.

விழாவில் சிறப்புரையாற்றியதிருத்தந்தையின்பிரதிநிதி தோமஸ் யேசெங்நாண் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த இன்னல் நிறைந்த காலகட்டங்களில் நீங்கள் தீர்க்கமான முடிவொன்றைஎதிர்பார்த்தே நம்பிக்கையுடன் பயணித்துள்ளீர்கள். இதற்கு இறைவனின் துணை உங்களுடன் இணைந்திருக்கின்றது.

வன்னிச் சகோதர மக்கள் அரசியல் பொருளாதார ரீதியில் கடும் கஷ்டங்களை அனுபவித்து வந்துள்ளார்கள்.

எமது வரலாறு மற்றவர்களாலல்ல. எம்மாலேயே படைக்கப்பட வேண்டும். அண்மையில் நடந்த தேர்தல் சமாதானத்துக்கான ஒளியைத் தோற்றுவித்துள்ளது.

இந்த நிலையில் நாம் அனைவரும் சமாதானத்தின் கருவிகளாக செயற்பட வேண்டும் இதையே எமது பரிசுத்த பாப்பரசரும் வேண்டுகின்றார்சமாதானத்தை எந்தக் கட்சிகளோ, அமைப்புகளோ தந்துவிட முடியாது. நாம் அனைவரும் சமாதானத்துக்காக உழைக்க வேண்டும்.

இந்த ஆபத்தான காலத்தில் மக்களை சமாதானத்தின் கருவிகளாக தொடர்ந்தும் எமது திருச்சபை நடத்திவரும் என நம்புகிறேன் என்றார். (உ-59)

### நாய்கள் அழிப்பு

## நாளை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் -கிழக்குப் பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில், கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கை நாளை இடம் பெறவுள்ளது.

கோப்பாய் பொதுச் சுகாதாரப் பகுதியினரும், வலிகிழக்குப் பிரதேச சபையினரும் இணைந்து இந் நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளனர். (உ)

### சீனி, உருளைக்கிழங்கு விலைவீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உருளைக்கிழங்கு, சீனிஆகியவற்றின் விலைகள நேற்றுதிடீரென வீழ்ச்சிகண்டுள்ளது.

180ரூபாவாக விற்பனை செய்யப்பட்டஒருகிலோ உருளைக்கிழங்கு 125ரூபாவாகவும், 54ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒருகிலோசீனி 44ரூபாவாகவும் நேற்றுமுதல் யாழ். நகரில் விற்பனைசெய்யப்பட்டு வருகிறது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் அதி உச்ச விலையேற்றத்தை கண்டித்து கடந்த சனிக்கிழமை புளொட் அமைப்பினரால் இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (வ)

### யாழ். வந்த நாண் நேற்று கொழும்புபயணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வியாழனன்றுயாழ். வந்த பாப்பரசரின்இலங்கைப் பிரதிநிதி மேதகு தோமஸ் யங்செங் நாண் நேற்றுக் காலை தனது பயணத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பினார்.

இவருடன்கூடவந்த கண்டி, திருமலை, மட்டு, மன்னார் மறை மாவட்ட ஆஜர்களும் நேற்று இங்கிருந்து புறப்பட்டனர். (உ)

# இடதுசாரிக் கொள்கை தவறாத அரசியல்வாதி சமரக்கொடி

## நினைவுக் கூட்டத்தில் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் அரசியல் வரலாற்றில் தமிழர் சிங்களவர் என்ற பேதமின்றிஇடதுசாரிக் கொள்கைக்காக உண்மையாக வாழ்ந்தவர் எட்மண்ட் சமரக்கொடி.

அவர் தனது கொள்கைகளில் அணுவளவேனும் விலகாமல் வாழ்ந்தார். அதுவே அவரின் அரசியல் அஸ்தமனத்திற்கு வழிகோலியது.

இவ்வாறு தோழர் தா. குகநேசன், பழம் பெரும் இடதுசாரியும் அரசியல் வாதியுமான எட்மண்ட் சமரக் கொடியின் 10 ஆவது நினைவு தினக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் பி.ப 3.30 மணியளவில் யாழ். தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு ஏ.சி. ஜோர்ஜ் தலைமைவகித்தார். இக் கூட்டத்தை சர்வதேச மாக்ஸிய குழு ஒழுங்கு செய்திருந்தது.

தோழர் குகநேசன்தொடர்ந்தும் உரையாற்றுகையில்; 1960 ஆம் ஆண்டில் யாழ் கச்சேரியில் நடைபெற்ற சத்தியாக் கிரகப் போராட்டத்திற்கு எட்மண்ட் சமரக் கொடி தனது முழு ஆதரவை வழங்கினார்.

அன்றைய இடது சாரிகள் தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்டு செயற்பட்டனர். ஆனால் இன்று இடதுசாரிகள் என்று கூறிக் கொண்டு சில தென்னிலங்கை இனத்துவேஷக் கட்சிகள் இனவாதத்தைக் கக்கிவருகின்றன என்றார்.

மேலும் அவர் பேசுகையில்; மாவிட்ட புரத்திலே அன்று நடைபெற்ற வெகுஜனப் போராட்டத்தில் கலந்து கொண்ட எட்மண்ட் சமரக் கொடி பொலிஸாரின் குண்டாந்தடித் தாக்குதலுக்குஉள்ளானார்.

சிங்கள மக்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் தமிழ் மக்களும் அனுபவிக்க வேண்டும் என்ற கொள்கையுடன் எத்தகைய அரசியல் நெருக்கடிகள் வந்த போதும் விட்டுக்கொடுக்காது வாழ்ந்த எட்மண்ட் சமரக்கொடியை தமிழ் மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள் என்று கூறினார். (எ-19)

# சந்தைகள் அனைத்தையும் உழவர் சந்தையாக மாற்ற யோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் அண்மையில் விவசாயச் செயலமர்வு இடம்பெற்றது.

அபிவிருத்தித் திணைக் களம், யாழ். பல்கலைக் கழக விவசாயபீடம்,கமநல சேவைகள் நிலையம் என்பவற்றின் பிரதிநிதிகள், விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்ட இச் செயலமர்வில் விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், மற்றும் விளை பொருட்களைச் சந்தைப் படுத்துவதில் ஏற்படும் சிக்கல்கள் ஆகியவை குறித்து ஆராயப்பட்டன.

அத்துடன், அச்சுவேலிச்சந்தையில் அதிகரித்துக் காணப்படும் தரகர் கெடுபிடி, மற்றும் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள், தரகர் தொல்லையின்றி விளை பொருட்களைச் சந்தைப் படுத்தும் வசதியை சகல சந்தைகளிலும் ஏற்படுத்துதல்;

சந்தைகள் அனைத்தையும் உழவர் சந்தையாக மாற்றுதல், ஆகியன தொடர்பாக ஆராயப்பட்டதுடன்,

குறிகட்டுவான் ஊடாக மன்னாருக்கு குடாநாட்டு விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை கப்பல் மூலம் எடுத்துச் சென்று சந்தைப் படுத்த வாய்ப்பேற்படுத்துவதாக அமைச்சர் மகேஸ்வரன் உறுதியளித்த போதிலும் அதற்குச் செயல்வடிவம் கொடுக்கப்படாமை குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டது. (உ)

# விடுதலைப் புலிகள் மீதான தடையை அமெரிக்கா நீக்காது

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது, இலங்கை அரசு விதித்திருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கினாலும், அமெரிக்க அரசு நீக்கப் போவது இல்லையென அமெரிக்கத்தரப்புகள் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுவர் ஆஸ்லிவில்ஸ் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த வருடங்களில் இலங்கை அரசின் வேண்டுகோளுக்கு இணங்கவே, தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டத்தையும் கொள்கைகளையும் சட்ட திட்டங்களையும் தனியாகஆராய்ந்து பயங்கரவாதப் பட்டியலில் புலிகள்சேர்க்கப்பட்டனர்.

ஆனால், இலங்கையில் தற்போது இடம்பெற்றுவரும் சமாதான முயற்சிகளின் அடிப்படையில் பிரதமர் ரணில் தலைமையிலான குழுவொன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மீது இலங்கை அரசு விதித்திருக்கும் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க ஆலோசித்து வருகின்றது.

இவ்வாறான நிலையில் தனியானதொரு மீளாய்வினை நடத்திய பின்னரே தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்குவது தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார். (உ-8)

புறக்கணிப்புக்கு எதிராக நேற்று

# எரிபொருள் விநியோகிக்கும் ஊர்திகள் சங்கம் ஊர்வலம்

## அரச அதிபரிடம் மகஜரும் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

50ஆண்டு காலத்திற்கு மேலாக நமது மூதாதையர் முதல் இன்றுவரை, ,வீதி வீதியாகவீடுவீடாக மண்ணெண்ணெயை அரசஅங்கீகாரவிலையோடு விற்பனைசெய்துநமது குடும்ப வருமானத்தோடு, சேவையாக கருதி கடமை புரியும் எம்மை தட்டுப்பாடான காலங்களில் புறக்கணிப்பது ஏன்?

யாழ் மாவட்ட எரிபொருள் விநியோகிக்கும்ஊர்திகள் சங்கத்தினால் தமது சங்கத்தின் மூலம்எரிபொருளைப் பொதுமக்களுக்குவிநியோகிக்காமையினால் ஏற்படும் அசௌகரியங்களை வெளிக்கொணரும் வகையில் நேற்று இடம் பெற்றஊர்வலத்தின் முடிவில் யாழ்.செயலகத்தில் வைத்து அரச அதிபரிடம் கையளிக்கப்பட்ட மகஜரில் மேற்கண்டவாறுவினா எழுப்பப்பட்டுள்ளது. அம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அரச அங்கீகாரம் பெற்று எரிபொருள் விநியோகிக்கும் ஊர்திகளுக்கு, மண்ணெண்ணெய் வழங்காத முகவர் நிலையங்கள் மூலம் தனியாருக்கு வழங்குவதனால் கறுப்புச் சந்தைக்காரர் உருவாகுவதோடு மக்கள் பல அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றார்கள்.

இலங்கை பெற்றோலியம் கூட்டுத் தாபன அங்கீகாரம் பெற்று கடமை புரியும் எம்மூடாக மட்டுமே மக்கள் மண்ணெண்ணெய் பெற்றுக் கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும்.

சாதாரண காலங்களில், நாளொன்றுக்கு ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெய் விற்பனை செய்து கிடைக்கும் வருமானத்தில் குடும்பம் நடத்தும் நமது சேவையை, இன்று முதல் நமது ஊர்திகள் மூலம் மக்கள் பயன பெறுவதற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொளகிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சுமார் 20 வரையான எரிபொருள் விநியோகிக்கும் ஊர்திகள் அதன் சாரதிகள் நல்லூர் ஆலய முன்றலில் ஒன்று சேர்ந்து காலை 9.00 மணியளவில் ஊர்வலம் ஆரம்பமானது.

இவ் ஊர்வலத்தில் ஈ. பி. ஆர். எல் எவ், புளொட் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (உ-10)

# வலி கிழக்கு பிரதேசசபை நீர்வேலி

நீர்வேலி, கோப்பாய், புத்தூர் அச்சுவேலி உரும்பிராய்

## உப அலுவலகங்கள்

### 1. ஆதனவரி அறிவித்தல் 2002

1987ம் ஆண்டின் பிரதேச சபைகள் கட்டளைச்சட்டம் இல. 15இன் கீழ் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் சார்பாக ஆதனவரி அறவீடு சென்றவருடம் அறவிடப்பட்ட வரி விகிதத்தின் பிரகாரம் 2002ம் ஆண்டு அறவீடு செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2002ம் ஆண்டுக்கான ஆதனவரியை 31 - 01 - 2002ம் திகதிக்கு முன்பாக முழுமையாகச் செலுத்துவோருக்கு, அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்கும் உரிய வரியை அந்தக் கந்தாயத்தின் முதலாம்மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டுக்கான வரியின் 5%கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத் தவறின் வசிப்பிடங்களுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் 15%மும் ஏனைய ஆதனங்களுக்கு 20%மும் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்துச் செலுத்தப்பட வேண்டும்.

எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை 31 - 01 - 2002ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக அந்தந்த அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: 01. 2001ம் ஆண்டு முடியவுள்ள வரி நிலுவைகள் செலுத்தப்பட்ட பின்பே 2002ம் ஆண்டுக்கான வரி ஏற்றுக்கொள்ளப்படும்.

02. சேதமடைந்தும், காலியாகவுள்ளதுமான ஆதனங்களுக்கான வரிவிலக்கின் பொருட்டான விண்ணப்பங்கள் 31 - 01 - 2002க்கு முன் கிடைக்கக் கூடியதாக இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

03. ஆதனவரி நிலுவை சம்பந்தமாக தனிப்பட்ட அறிவித்தல்கள் வழங்கப்பட மாட்டாது. ஆதன உரிமையாளர்களும், அவர்கள் இல்லாதவிடத்து வாடகைக் குடியிருப்பாளர்களும் சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு நிலுவைகளைச் செலுத்தி எம்முடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### 2. வீடமைப்பு,நகர சீர்நிருத்தக் கட்டளைச் சட்டம் பிரிவு 268இன் பிரகாரமானஅறிவித்தல்:

வலி. கிழக்கு பிரதேசசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் கட்டிடங்கள், மதில், மலகூடங்கள் என்பன கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் சட்டத்தின் படி தண்டனைக்குரிய குற்றமாகும். ஆகவே கட்டிடங்கள் மதில், மலகூடங்கள் என்பன கட்டுவதற்கும், பழையனவற்றைப் புதுப்பிப்பதற்கும் பிரதேச சபையில் இருந்து பெறப்படும் முறையான விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து வலி. கிழக்குப் பிரதேச சபையின் முன் அங்கீகாரம் பெறுதல் வேண்டும் எனபதை இத்தால் அறியத்தருகின்றேன். முன் அங்கீகாரம் பெறாது கட்டப்படும்கட்டிடங்கள் யாவும்எதுவித நஷ்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும் என அறியத்தருகிறேன்.

### 3. 2002ம் ஆண்டுக்கான வியாபார உரிமம்

வலி. கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களும் தங்கள் வியாபார நிலையங்களுக்கான விண்ணப்பப் பத்திரத்தை வலி. கிழக்குப் பிரதேசசபையின் உப அலுவலகங்களில் பெற்று 31 - 01 - 2002ம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து காரியாலயங்களில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் 2002ம் ஆண்டு பங்குனி 31ம் திகதிக்கு முன்னர் உரிமக் கட்டணத்தை செலுத்தி வியாபார உத்தரவுப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளும்படியும் கேட்டுக் கொள்ளுகிறேன். 31 - 03 - 2002ம் திகதிக்குப் பின்னர் வியாபார அனுமதிப்பத்திரமின்றி எதுவித வர்த்தக நிலையங்களும் அனுமதிக்கப்பட மாட்டாதுஎன அறியத்தருகின்றேன்.

### 4. படவரைஞராகப் பதிவு செய்தல்

2001ம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்தவர்கள் தங்கள் அனுமதியை31-01-2002ம் திகதிக்கு முன்னர் புதுப்பித்துக் கொள்ளுமாறும் புதிதாகப் பதிவுசெய்பவர்கள் மேற்படி திகதிக்கு முன்னர் அதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்து சபையின் அனுமதிபெற்று பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பூ. குணசிங்கம்
(ஜே. பி.யு.எம்)
தலைவர்,
வலி. கிழக்கு பிரதேசசபை,
நீர்வேலி.

(கி/3317)

வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந் தற்று

குறள்

# வலம்புரி

## ஏன் இந்த நடிப்பு!

யாழ். மாவட்டத்திற்கு அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் வருகைதருகின்ற போது நம் உள்ளூர் அதிகாரிகள் படும் பாட்டைப் பார்க்கும் போது வேதனையாகவே இருக்கிறது. அமைச்சர்கள் வருகின்ற வீதிக்கு தார்ஊற்றுவது முதல் தடையின்றி மின்சாரம் வழங்குதல்அலுவலகங்களுக்குவர்ணம்பூசுதல் வரை இல்லாததெல்லாம் இருப்பது போல் காட்டிக் கொள்ளும் முயற்சி நடைபெறும்.

சாதாரண பொது மக்கள் அரச அலுவலகங்களுக்குச் சென்று உதவி கோரினால்மூலப்பொருள் இல்லை, போதிய வளம் இல்லை கொழும்பிலிருந்து எதனையும் எடுத்து வர முடியாதுள்ளது என்றெல்லாம் கூறும் நம் அதிகாரிகள், அமைச்சர்கள். உயர் அதிகாரிகள் யாழ் மாவட்டத்திற்கு வரும் போது மட்டும் விழுந்தடித்து வேலை செய்வது ஏன் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

அமைச்சர் வருகின்ற வீதி கிடங்கும் குழியுமாக இருக்கும் போதே யாழ்ப்பாணத்தின் உண்மை நிலையை வருகின்ற அமைச்சரால் புரிந்து கொள்ளமுடியும். இல்லையேல் தான்வருகின்ற வீதி எவ்வளவு அழகாக இருக்கின்றதோ அதேபோன்று தான் ஏனைய வீதிகளும் அழகாக இருக்கும் என அவர் எண்ணிக் கொள்வார்.

அதே போன்றே அமைச்சர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் நாள்வரை மின் வெட்டின்றி மின்சாரம் வழங்கட்படுவதும் அமைச்சர் விமானம் ஏறிய அடுத்த கணமே மின் வெட்டை மேற்கொள்வதும் யாழ்ப்பாணத்தின் யதார்த்த நிலையைஎடுத்துக்காட்ட மாட்டாது. உள்ளதை உள்ளபடி எடுத்துக்காட்டுவதும், எடுத்துக் கூறுவதுமே நிவாரணத்தைத் தேடிக் கொள்வதற்கான வழியாகும்.

இதனை விடுத்து வசதிகள் இல்லாதஇடத்தை வசதியுள்ள இடம்போல் அதிகாரிகள் காட்டுவதால் பொது மக்களே பெரிதும் பாதிப்படைவர் என்பதுடன்,

அமைச்சர் வருகின்ற போது வீதி போட முடியுமென்றால், மின்சாரம் தொலைபேசி வழங்க இயலுமென்றால் இங்குள்ள அதிகாரிகளின் அசமந்தப் போக்கினாலேயே இவை நமக்கு கிடைக்கவில்லை என மக்கள் கருதுவர்.

# பனம் பண்டங்கள் ஊட்டமுள்ள உணவாகவும் நோய் தீர்க்கும் மருந்தாகவும் விளங்குகின்றன

பனம்பொருட்கள்பலஉணவாகவும் மருந்தாகவும் பயன்படுகின்றன. இதில் பலநோய்களைத் தீர்க்கும் மருத்துவக் குணங்கள் காணப்படுகின்றன. பதநீர் தித்திப்பாய் இருக்கும். இது அமிர்த மாதலால் மரணம் வராமறகாக்கும் குணம் இதற்கு உண்டு. பதநீரில் உடம்பை வளர்க்கக் கூடிய உயிர்ச்சத்துக் களும், நோயணுகாமற்காக்கும் மருந்துச் சத்துகளும் உண்டு. பதநீரால் உடற்குளுமையும் முகப்பொலிவும் எடைகூடுதலும், களைப்பு நீங்குதலும் உண்டாகும். இதில் காரத்தன்மை, சர்க்கரைச்சத்து, சுண்ணாம்புச் சத்து, இரும்புச்சத்து, தயாமன், பிளேவின், நிகோடினிக் அமிலம், புரதம் முதலியனவும் உள்ளன. பதநீரிலுள்ள சுண்ணாம்பை முறிக்க வேமாங்காய் அல்லது எலுமிச்சம் பழ ரசத்தைச் சேர்க்கின்றனர். பதநீர் புளிப் பேறிக்கள்ளாக மாறுவதைத் தடுக்கவே சுண்ணாம்பு பூசுகிறார்கள். உணவுச் சத்தும், உயிர்ச்சத்தும், ஊட்டச்சத்தும் உள்ள உத்தம உணவு பதநீர், ஊட்டச்சத்துமிகுந்துள்ளபதநீரின் உணவுச் சத்துகளை ஆராய்ந்தவர் அதில் நீர்ச் சத்து84.75 விகிதமும் புரதச்சத்து .10 விகிதமும், கொழுப்புச் சத்து .17விகிதமும், உலோகச்சத்து .66விகிதமும்சர்க்கரைச்சத்து 14.35விகிதமும் உண்டென்பர், இன்னும்இதனை நுணுகி ஆராய்ந்த கலாநிதி கமலா சோஹனி, கலாநிதி பான்சே ஆகியோர்அதிலுள்ள தன்மைகள் யாவும்பாடசாலைப் பிள்ளைகளுக்கு நல்லவை எனக் குறிப்பிட்டுள்ளனர். பதநீரிலுள்ள உயிர்ச்சத்து கண்ணைப் பாதுகாப்பதோடு நல்ல ஒளியையும் தருகிறது. அதிலுள்ள புரதச் சத்து உடலுக்கு உறுதியையும் தசை வளர்ச்சியையும் தருகிறது. கொழுப்புச் சத்து குழந்தைகளை நோயணுகாமல் வளர வசதி செய்கிறது. அதிலுள்ள உலோகச் சத்துக்களிற் பிரதானமான இரும்புச்சத்து இருதயத்துக்கு உறுதி தருகிறது.

## மருத்துவ விளக்கம்

### பனை வெல்லம்

பதநீர் இரத்தத்திலுள்ள செவ்வணுக்களை விருத்தி செய்து, கண்ணோய், வாய்ப்புண், சொறிசிரங்கு, தடிமன், காசநோய் முதலியவற்றைக் குணப்படுத்துகிறது. பதநீரைக் காய்ச்சி அதிலிருந்து பனைவெல்லம், பனங்கற்கண்டு, பனஞ்சீனி முதலியன தயாரிக்கப்படுகின்றன. பனைவெல்லத்தில் B உயிர்ச்சத்தும், மக்னிஷியமும், இஸானிசைப் என்னும் மருந்துப் பொருளும் அடங்கியிருப்பதால், இரத்தசோகை, திரேக உப்புசம் சீதபேதி க்ஷய ரோகம் முதலியநோய்களை இது குணப்படுத்துகிறது. ஆண்பனைப் பதநீர் சர்க்கரைச் சத்தும், வீரியமும் உள்ளது. பெண்பனை அதிக பதநீரைச் சுரக்கும். ஆனால் அதன் சத்துக் குறைவாகவே இருக்கும். ஆண்பனைப் பதநீருக்குச் சோமபானம் என்றும் பெண்பனைப்பத நீருக்குச் சுரபானம்என்றும்பெயர்.

ஆரோக்கிய வாழ்வுக் குப் பனை வெல்லம் போன்ற (பனங்கட்டி) வேறெந்த இனிப்பும் கிடையாது என்று மகாத்மா காந்தியடிகள் தமது அனுபவத்திற் கண்டு கூறியுள்ளார். பனங்கட்டி குன்ம நோய்க்கும், மலச்சிக்கலுக்கும் கைகண்ட ஔடதமாகும். பனங்கட்டியைக் கரைத்துவடித்துப் பாகுகாய்ச்சிப் பச்சையரிசி மாவும்சேர்த்துப் பிசைந்து அதிரசம் தயாரித்து உண்பதால் வெப்பம் அடங்கும். பித்தந் தணியும். வேறுநோய்களும் நீங்கும். பருவகாலத்தில் பனையின் பிரயோசனம் எம்முடம்புக்குத் தேவையெனக் கண்ட எம்முன்னோர் ஆடிப் பிறப்பிலன்று பனங்கட்டிக் கூழ் குடித்தலை ஒருவழக்கமாக்கியுள்ளனர்.

சித்த வைத்தியர்கள் மெத்தப் புகழ்ந்து போற்றும் பனங்கட்டிகருவுற்றபெண்களுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் நல்லது. கணைச்சூடு முதலியவற்றால் உடல்மெலிந்த குழந்தைகளுக்கு மிகவும் நல்லது. சொறி, சிரங்கு, தடிமன் தலையிடி வந்தவர்களுக்கும் பனங்கட்டிகைகண்டமருந்து. இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கும், இருதயப் பெலவீனமுள்ளவர்களுக்கும்பனங்கட்டி பெரிய ஔடதம், இதயத்தை வலுவடையச் செய்யவல்ல பனங்கட்டிபற்களையும்உறுதியுள்ளனவாக்குகிறது.

### பனங்கற்கண்டு

பனங்கற்கண்டு உபயோக மருத்துவத் துறையில் மிகவும் அதிகமாகும். வெப்ப வியாதிகளால் வேதனைப்படுகிறவர்கள் பனங்கற்கண்டு உமிழ்ந்து உட்கொள்வது உடம்புக்குநல்லது என்றுவைத்தியர்கூறுவர் இருமலுக்கும் தொண்டைக் கரகரப்புக்கும்பனங்கற்கண்டு நல்லமருந்து. வெப்பத்தால் கண் சிவந்து இருக்கும்போது பனங்கற்கண்டைச்சுத்தமான நீரில் கரைத்துக் கண்களில் விடுவதால் வெப்பம் தணிவதோடு சிவப்பு நிறமும் நீங்கி விடும்.

### பனாட்டு

பனாட்டை நேரமறிந்து உண்பதால் கரப்பான், கிரந்திஅழுகியகிரந்தி, சொறி, தேமல், நீர்க்கடுப்பு, தலைக்கனம் பித்தவாயுவினால் உண்டாகும்தீமைகள் யாவும் நீங்கும். குடற்சிக்கல் நீங்கும். மலச்சிக்கல்கழியும்.

### நுங்கு

நுங்கு பசியையும் தாகத்தையும் தீர்ப்பதோடு, அரிய மருந்தாகவும்பயன்படுகிறது, நுங்கின்மேல் தோல், சதை, நீர் எனப்படும் மூன்று பகுதிகளும் மூலிகைகளபோல் மருந்தாகின்றன. மேல்தோல் துவர்ப்புச் சுவையுடையது. ஆனால் நுங்கில் மிகவும் பிரயோசனமுள்ள பகுதி இதுவே. இதில் உயிர்ச்சத்து A பிரிவும் அயனசத்து எனப்படும் இரும்புச்சத்தும் நிறையவுள்ளன. இதனால் இரத்த விருத்தியுண்டாவதோடு, கணைச்சூடுதாக்கி மெலிந்து ஒல்லியாகவுள்ள சிறுவர்களுக்குஅதியற்புதமருந்தாகவும் உள்ளது. சோகை வியாதி குணமாகும். மெலிந்ததேகம் பருக்கும். இங்ஙனமே நுங்கின் சதையும் அருமையான மருந்து. வயிற்றுக் கோளாறு மலச்சிக்கல், மூலாதாரச்சூடு, மூலக் கடுப்பு, வயிற்று வாயு என்பன நுங்கினால் குணமாகும். நுங்கின் நீரினால் ஞாபகசக்தி அதிகரிக்கும் இரத்தம் ஊறும். கண்ஒளிபெறும். உடம்பும் உள்ளமும் சுறுசுறுப்படையும். நுங்கின் நீர் பல நோய்களைக் குணப்படுத்தும் தன்மையுள்ளது.

### பனங்கிழங்கு

பனங்கிழங்கில் தனிப்பட்ட மருத்துவக்குணங்கள் உண்டு' பித்தமேகம் முதலான நோய்களை அகற்றும். குளிர்ச்சியையும், வனப்பையும் உண்டாக்கும். மலத்தை இலகுவாகக் கழியச் செய்யும். வயிற்றில் கிருமிகள் பூச்சிகளை அழிக்கும். பச்சைக்கிழங்கை இடித்து வந்ததை நீரிற் கரைத்து வடித்தெடுத்து உலரவைத்த மாவினை அறோட்டுமாபோல உபயோகிக்கலாம். காய்ந்த கிழங்கை ஒடியல் என்பர். ஒடியலை இடித்து மாவாக்கி பிட்டு அவிப்பர். ஒடியற் பிட்டுக்கு கீரை மிகவும் உவப்பானது. இந்த உணவினால் தீங்குதரு சலரோகம், பாண்டு, குன்மம் ஆய கெட்டநோய்களொன்றும் அணுகிடாது.

உடம்பில் வாய்வு, உளைவு, பிடிப்பு, மலபந்தம்முதலியன உண்டாகி வருத்தும் வேளையில் நம்மவர் உடனடியாக உபயோகித்த கைகண்டமருந்தும், உணவும் ஒடியற் கூழாகும். கொழுக்கிப்புழுக்களைக் கொல்லும் இக்கூழுடன் மாலையில் புழுக்கொடியல் சாப்பிட பூச்சிகளெல்லாம் மலத்தினோடு வெளியேறிவிடும். அணுவளவு அழுக்கும் குடலகத்தில் அணுகமாட்டாது. சித்தவைத்தியத்தில் மெத்தப் பிரகாசித்தபோகர். புலிப் பாணி, கொங்கணர் முதலானோர் பனங்கிழங்கின் உபயோகத்தினைக் கூறியுள்ளனர். மேகரணம், வெள்ளை, வெட்டை நீர்க்கடுப்பு, சருமநிறமாற்றம் முதலிய நோய்களுக்குப் பனங்கிழங்கு தெய்வீக சஞ்சீவியாய், உயிர் கொடுத்து உடல்வளர்க்கும் மூலிகையாய்உள்ளது என்பர். பனங்கிழங்கில் சில இரசாயனப் பொருள்கள் உள்ளன. சிறு பிள்ளைகளுக்கு உண்டாகும் நாடாப்புழு, பாண்டுக் கிருமி கீரைப்பூச்சி தானப்புழு முதலிய நோய்க்கிருமிகளைக் கொன்று வெளியேற்றும் சக்தி பனங்கிழங்கின் இரசாயனப்பொருள்களுக்குண்டு.

பனங்கிழங்கு, ஒடியற்பிட்டு, பனங்கட்டி, கல்லாக்காரம் என்னும் இவற்றில் இன்ன நோய்கள் தீரும் என்பதைப் பின்வரும் பாடல்சுட்டிக்காட்டுகிறது எனலாம்,

''கிழங்கு நன் மதுரமாகும் கெட்டியாய் மலத்தைப் போக்கும், களங்கமில் பிட்டு மஃதே காமர் கூர் கிருமி போக்கும், பழந்திரள் மலங் குன்மம் போம், பனங்கட்டி உண்டாற் கண்டு முழங்கிய சேடங் குன்மமுதிர்ந் திடா தடக்குமன்றே''

பூரானும்மிகுந்த சுவையும், உணவுச்சத்துக்களும் உள்ள ஒப்பற்ற இயற்கை உணவாகும், அதில் 17. 2%, மாச் சத்தும், 11% உயிர்ச்சத்து C யும் ஓரளவு புரதமும் கொழுப்பு, உலோகச் சத்து உண்டென்பர். பூரானைப் புத்தமுதுஎன்று புலவர்போற்றுவர். அதனைப் பிட்டுடன் சேர்த்தும் உண்ணலாம்.

தொகுப்பு: மதிவாணர்

நன்றி-பனைவளம்.

## தினசரி தியானம்

### நட்பு

ஓடும் இருநிதியும் ஒன்றாகக் கண்டவர்கள்
நாடும் பொருளான நட்பே பராபரமே

-தாயுமானவர்

பிரியாது என்மனத்தகத் திருந்து எனக்கு நலம்நல்கும் நட்பே, உன்னை நான் வணங்குகின்றேன்.

செல்வத்தில் பற்றுவைக்கும் மக்கள் செம்பொருளாகிய தெய்வத்தைப் புறக்கணிக்கின்றனர். பொருள் பற்று தெய்வ நட்பைப் புறக்கணித்து விடுகிறது. பொருள் பற்று நீங்குமளவு நல்ல உறவாகச்சித்தமிசை குடியிருக்கும் பரமனது பராமரிப்புப் புலனாகிறது. பிறகு அதற்கு நிகரான துணைவேறொன்றுமில்லை என்னும் தெளிவு வருகிறது. அவனது நட்பு ஒன்றே நாடத்தகுந்தது.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

# பிரதமரின் கொள்கை விளக்க உரை இன்று

(கொழும்பு)

பிரதமர்ரணில்விக்கிரமசிங்கா புதியஅரசின் கொள்கைகள், எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக இன்று நாடாளுமன்றத்தில் விளக்கவுரையாற்றவுள்ளார்.

இக் கொள்கைவிளக்கஉரையில் விடுதலைபுலிகளுடனான சமாதானப்பேச்சுவார்த்தை, வன்னிக்கான பொருளாதாரத்தடை, நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஆகியன தொடர்பான முக்கிய விபரங்கள் அடங்கியிருக்கும்.

இந்த உரைமீதானவிவாதம் நாளையும் நாளை மறுதினமும் இடம்பெறவுள்ளது.

(உ)



கடந்த தைப்பொங்கல்தினத்தன்று பிரபல வர்த்தகர் இ.ச.பேரம்பலம் நாகரெட்ணம் அவர்களின் ''மணி ஓசை'' இல்லத்தில் .பொங்கல் வைபவம் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படம். படத்தில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா , இந்துகலாச்சார அமைச்சர் தி.மகேஸ்வரன் ரூபவாஹினி ஒளிபரப்புக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் மற்றும் பிரமுகர்கள் பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்டதைக் காணலாம். (படம்: கோபி)

**மாநில அரசுகள்...**

கர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தென்னிந்தியாவில் தங்கியிருந்து இலங்கை அரசுடன் சமாதா னப் பேச்சில் ஈடுபட அனுமதிக்கு மாறு கோரியிருந்தனர்.

இக்கோரிக்கை குறித்து இந்திய மத்திய அரசு உத்தியோக பூர்வமாக முடிவு எதனையும் அறிவிக்கவில்லை.

ஆனால் தமிழ்நாட்டு முதலமைச்சர் இ.பன்னீர்ச்செல்வம் மற்றும் அ.தி.மு.க பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதா ஆகியோர் விடுதலைப் புலிகளை தமிழ் நாட்டுக்குள் அனுமதிக்கக் கூடாதென்பதில் விடாப்பிடியாக மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் தென்னிந்தியாவில் தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா மற்றும் கர்நாடகம் ஆகிய நான்கு மாநிலங்கள் இருக்கின்றன. இதில் தமிழ்நாடு மாநிலம் எதிர்க்கின்ற போதும், ஏனைய மாநில அரசுகள் இவ்விடயம் குறித்து கருத்து எதுவும் வெளியிடவில்லை.

இதனடிப்படையில் தமிழ் நாட்டை விடுத்து ஏனைய மாநிலங் களில் விடுதலைப் புலிகள்ள அனுமதிக்க திரைமறைவில் முயற்சிகள் இடம் பெறுவதாகவும், இதனையே அமைச்சரின் கூற்று வெளிப்படுத்துவதாகவும் அரசியல்

ஆய்வாளர்கள் ஊகம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை ஆந்திரா, கர்நாடக மாநில அரசுகள் மத்திய கூட்டணி அரசுக்கு, ஆதரவானவை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

**நிபந்தனையற்ற...**

சமாதான முயற்சிகள் வெற்றி அடைவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அவர் சமாதானத்தை நிலைநாட்டக் கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் மீதான வெறுப்புணர்வு களையப் படவேண்டும். இதனையே மக்கள் அனைவரும் எதிர்பார்க்கிறார்கள்.

சுயாட்சி அடிப்படையில் தம்மைத்தாமே நிர்வகித்துக் கொள்வதற்கு அதிகாரங்களை புலிகள் பெறுவதில் தவறில்லை, இத்தகைய சுயாட்சி அமைப்பு இந்தியாவில் காணப்படுகிறது. ஆனால் எவரும் ஆயுதங்களை ஏந்தியிருக்கக் கூடாது என்றும் மகாநாயக்கர் தெரிவித்துள்ளார்.

இத்தூதுக்குழு மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் ரம்புக் கலவிபல்சிசார தேரர், சங்கைக்குரிய அம்பன்வலஸ்ரீ சன்னியாசிக தேரர் ஆகியோரையும் சந்தித்துள்ளது. (வ)

**பத்து......**

டிருக்கும் அர்த்தமற்ற யுத்தம் காரணமாக பலஆயிரக்கனக்கான அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப் பட்டிருந்தும் ஆயிரக்கணக்கானோரின் சொத்துக்கள் அழிக்கப் பட்டும் உள்ளன.

***காரணமின்றி இளைஞர்யுவதிகள் கைது ~ சித்திரவதை***

காரணமெதுவும் இன்றி ஆயிரக்கணக்கான தமிழ்இளைஞர்கள், யுவதிகள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு விசாரணைகள் எதுவுமின்றி சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அது மட்டுமன்றி தமிழ் கைதிகள் சிறையில், சககைதிகளினால் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வுகளும் தென்னிலங்கை சிறைச்சாலைகளில் தொடர்ச்சியாக நடைபெறும் சம்பவங்களாகி விட்டன. வெலிக்கடை பிந்துனுவெவ, களுத்துறைச் சிறைசாலைச் சம்பவங்கள் இதற்கு உதாரணங்கள் ஆகும். எது எப்படி இருப்பினும் எமது பராமரிப்பில் இவ்வளவு காலமும் தங்கி இருந்த நீங்கள் மிகவும் மனிதாபிமானத்துடனும் தோழமையுடனும் கவனிக்கப்பட்டுள்ளீர்கள். இத்தகைய சித்திரவதைகளோ, பகைஉணர்வுகளோ இன்றி பராமரிக்கப்பட்டிருக்கின்றீர்கள் .

***எமது கோரிக்கைகள் புறக்கணிக்கப்படுகிறது***

உங்களது விடுதலை தொடர்பாக மாறிமாறி வரும் அரசாங்கங்களுடன், பலதடவைகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் எமது கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு வந்தது. வறுமையால் வாடும் அப்பாவி சிங்கள இளைஞர்களை பல்வேறு ஆசை வார்த்தைகளை கூறி கவர்ச்சிகரமான சம்பளம் வழங்குவதாக வாக்குறுதியளித்து படைக்கு சேர்க்கும் அரசாங்கம் அப்பாவிகள் இறக்கும் போது அல்லது காயமடையும் போது கரிசனை காட்டுவதோ அன்றி போரில் கைது செய்யப்படும் படைவீரர்களது மனநிலை தொடர்பாகவோ அல்லது அவர்களது விடுதலை தொடர்பாகவோ எந்தவிதமான அக்கறையும் காட்டுவதே இல்லை.

தமிழ் மக்கள் தங்களது தாயக பூமியில் சுதந்திரமாகவும் சமாதானமாகவும், சகல உரிமைகளுடனும் வாழவே ஆசைப்படுகின்றனர். விடுதலை பெற்றுசெல்லும் நீங்கள் எமது யதார்த்தநிலையை தென்னிலங்கை மக்களுக்கு எடுத்து கூற வேண்டும் எனறும் தமிழ்ச்செல்வன் கூறினார். (வ)

**விடுதலை....**

இதேதினம் பிடிக்கப்பட்ட அனுராதபுரத்தைச் சேர்ந்த
ஏ.எல்.அத்த நாயக்கா,
1998ம் ஆண்டு ஆகஸ்ட் 17ம் திகதி பிரின்ஸ் கப்பலில் பிடிக்கப்பட்ட

★எம்.பி முகமட்கஜால் மாத்தளை,
★ஜெயசுந்தர பன்னி நுவர,
★ராஜீவ் ஹெட்டியாவத்த,
★பி.பண்டாரா வாரியாப்பொல

1997ம் ஆண்டு யூலை மாதம் 2ம் திகதி பேசாலையில் மிஷன் கப்பல் தாக்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட

★மகிந்தடயஸ் வத்தளை,
★புஸ்பகுமார தேவிநுவர,
★சுனில் பெரேரா பன்னிப்பிட்டியா.

மேற்படி பத்துப்படை வீரர்களும் காணமல்போனோர் சங்கத் தலைவர் ஏ.பி நாணயக்கார திருமதி நாணயக்கார சமூகவியல் ஆய்வாளர் அஜித்ரூபசிங்கா காணமால்போன படையினரின் பெற்றோர் சங்கத்தின் கண்டி அமைப்பாளர் பராக்கிரம அபயவர்த்தன மக்கள் சமாதான இணைப்பாளர் எஸ்.வி.நாதன், சமயசமூக நிலைய இயக்குனர் அருட்தந்தை ஒஸ்வேல்ட் ரி.போல், போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கப்பிரநிதி திருமதி விசாகதர்மதாசா சர்வேதேச செஞ்சிலுவைச்சங்க வதிவிடப் பிரதிநிதிகள் முன்னிலையில் விடுதலை செய்யப்பட்டனர். (வ)

**பாதை மாறிய.....**

வழிதவறி பட்டிருப்புபாலத்தின்னூடு வாகனத்தைச் செலுத்தி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான போரதீவு கட்டரவுச் சந்திக்கு சென்றபோது புலிகள் அவர்களை வழிமறித்தனர். எனினும் அவர்களின் உத்தரவையும் கவனத்தில் எடுக்காது அதிகாரிகள் தொடர்ந்து சென்றனர்.

இதனையடுத்து கட்டரவுச் சந்தியில் காவலில் இருந்த விடுதலைப்புலிகள் இப்பொலிஸ் அதிகாரிகள் குழுவை சுற்றி வளைத்து அவர்களை விசாரணை செய்தனர். பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் இரு உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்கள் பத்து இன்ஸ்பெக்டர்கள் அடங்கிய குழுவையேபுலிகள் விசாரணை செய்தனர்.

பாதைதவறி வந்தமையாலேயே இச்சம்பவம் ஏற்பட்டதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்ததை அடுத்து புலிகள் அவர்களை விடுதலை செய்தனர். (ந4)

## பரீட்சை முடிவு வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை 1ம், 2ம், 3ம், 4ம் வருட மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகியுள்ளது. (இ)

## கல்வி அபிவிருத்திக் கூட்டம் 29 இல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் வருடாந்தம் நடத்தப்படும் மாகாணமட்ட கல்வி அபிவிருத்திக் கூட்டம் எதிர்வரும் 29ம் திகதி திருகோணமலையில் நடைபெற ஏற்பாடகியுள்ளது.

இக் கூட்டம் நாளைமறுதினம் நடைபெற ஏற்பாடகி இருந்தபோதும் தவிர்க்க முடியாத காரணத்தினால் 29ம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாகவும் இதில் யாழ் வலயக் கல்விப் பணிமனை உத்தியோஸ்தர்களும் கலந்து கொள்ள உள்ளதாகவும் யாழ் வலயக் கலவிப் பணிமனை அறிவித்துள்ளது (இ-19)


ஸ்ரீ ஐயப்பன் அர்ச்சனைகள்
(சமஸ்கிருதம்)

ஐயப்பனுக்கு உரிய அஸ்டோத்திரம், திரிசதி, சகஸ்ரநாமம் ஆகிய தொகுப்பு நூல்கள் வெளிவந்துள்ளது. அந்தணர்கள் சைவகுருமார்கள் விரும்பிய நிதியை கொடுத்து எமது இல்லத்திலும், கோண்டாவில் ஐயப்பன் ஆலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம் இதில்வருகின்ற நிதியாவும் ஐயப்பனின், திருப்பணிக்கு சமர்ப்பணம்.

சாமிசணரம்

தா. வாசுதேவக்குருக்கள்
சபரிச ஐயப்பன் ஆலயதலைவர் (4253)



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ் கிளை

பிரிவுப் பொதுக் கூட்டமும், தேர்தலும் - 2002


எதிர்வரும் 03.03.2002 (ஞாயிறு) பிரிவுகளில் நடைபெறவுள்ள பிரிவுப் பொதுக் கூட்டத்தில் சமாப்பிக்க அங்கத்தவாகள் பிரேரனைகள் அனுப்ப விரம்பின் 11.02.2002 (திங்கட்கிழமை)ற்கு முன்பாக அவ்வப் பிரிவுச் செயலாளருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

செஞ்சிலுவைச் சேவையில்,
கௌரவ செயலாளர்.

(C/3321)



முதலாம் வருட நினைவலைகள்
22.01.2002


திரு. அ. சத்தியமூர்த்தி
(12/2, கன்னாதிட்டி வீதி)

வாழ்வின் வசந்தத்தில் உயிர்த் தோழன்
என வதந்திணைந்தாய்,
கூடித்திருந்தே குவலயத்தை நாம்
அளந்தோம்.
இறுதி வரை தோள் கொடுப்பாய்
என்றே எண்ணிய என்னை - நீ
இடை நடுவில் பிரிந்த மாயம் என்ன?

இவர் பிரிவால் பெரிதும் துயருறும்.
திருமதி. சின்னத்தம்பி நேசம்மாவும்
மகன்
திரு. சி.மகாலிங்கம் குடும்பத்தினரும்

ஆறுகால் மடம்,
பழம் றேட்,
ஆனைக்கோட்டை

(C-3319)




தரம் நாடுவோர் தவறாமல் நாடும் இடம்





நிருத்திகா ஜுவலர்ஸ்


177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். PHONE 021-2694 (C/2367)


இப்பத்திரிகை வலம்புரி அன் கோ தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.01.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது